Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 10.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஆங்கிலப் பேச்சு வகுப்பு

புதுக்குடியிருப்பில் புதிய பிரிவு ஆரம்பம்

காலம்:- 24-01-2006 காலை 7 மணி

ஆசிரியர்:- இ.றஜித்

இடம்:- புதுக்குடியிருப்பு அரச வைத்தியசாலை அருகில்

முல்லை வீதி, புதுக்குடியிருப்பு.

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2037 தை 06 ஹிஜ்ரி 1426 துல்ஹஜ் 18 (20.01.2006) வெள்ளிக்கிழமை இதழ் 111

# வட - கிழக்கில் தாக்குதல்கள்; 4 பேர் பலி, 54 பேர் படுகாயம்!

யாழ்ப்பாணம்

திருகோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் என நேற்று இடம் பெற்ற தாக்குதல் சம்பவங்களில் 3 பொலிஸார் உட்பட நான்கு பேர் கொல்லப்பட்டதுடன் -

மேலும் படையினர், பொலிஸார், பொதுமக்கள் என சுமார் 54 பேர் காயமடைந்ததாகத் தெரியவருகிறது.

மட்டக்களப்பில் நடத்தப்பட்ட கிளைமோர் மற்றும் கைக்குண்டுத் தாக்குதல்களிலும், திருகோணமலையில் கிளைமோர் தாக்குதலின் போதும், யாழ்.குடாநாட்டில் கைக்குண்டுத் தாக்குதல்களின் போதுமே இந்தச் சேதங்கள் ஏற்பட்டன.

## குடாநாட்டிலும் 6 பேர் காயம்!

யாழ்ப்பாணம்

வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளில் நேற்று இடம்பெற்ற கைக்குண்டுத் தாக்குதல்களில் மூன்று படையினர் காயமுற்றதாக தகவல்கள் தெரிவித்தன.

நேற்றுக்காலை 11 மணியளவில் சாவகச்சேரிப் பகுதியில் இராணுவத்தினர் மீது துப்பாக்கி பிரயோகம் (12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் 7 பேர் காயம்!

மட்டக்களப்பு

மட்டக்களப்பு நகரில் பல.நோ.கூ. சங்கத்துக்கு முன்பாக கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மீது நேற்றுக் காலை நடத்தப்பட்ட கிரனேட் தாக்குதலில் பெண் பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவர் காயமடைந்தார்.

இதையடுத்து படையினர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் 3 பொலிஸார் பலி!




மட்டக்களப்பு

மட்டக்களப்பு - தாண்டவன்வெளியில் இராணுவம் மற்றும் பொலிஸார் பயணம் செய்த ட்ரக் வண்டி மீது நேற்று மாலை நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் மூன்று பொலிஸார் கொல்லப்பட்டதுடன், 13 பொலிஸாரும் 7 படையினரும் படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து நடத்தப்பட்ட தாக்குதலில் பொதுமகன் ஒருவர் கொல்லப்பட்டதுடன் 3 பேர் காயமடைந்தனர்.

நேற்றுமாலை 5 மணியளவில் நடைபெற்ற இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருதாவது -

மட்டக்களப்பிலிருந்து 500 மீற்றர் தொலைவில் திருகோணமலை வீதியிலுள்ள தாண்டவன்வெளி என்ற இடத்தில் இந்தச் சம்பவம் நடைபெற்றது.

படையினரின் வாகனம் சென்று கொண்டிருந்தபோது வீதியோரத்தில் நிறுத்தப்பட்டிருந்த சைக்கிளொன்றில் பொருத்தப்பட்ட கிளைமோர் குண்டின் மூலமே (12 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் 4 படையினர் படுகாயம்

### 12 பொதுமக்களும் காயம்



திருகோணமலை

திருகோணமலையில் நேற்று மாலை கடற்படையினரின் ஜீப் மீது நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் நான்கு படையினர் படுகாயமடைந்தனர். படையினரின் பதில் தாக்குதலில் 12 பொதுமக்கள் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் திருகோணமலை - அனுராதபுரம் சந்தியில் நேற்று மாலை 3.50 மணியளவில் இடம்பெற்றது. இந்தச் சம்பவத்தில் படை யினர் சென்ற ஜீப் பலத்த சேதமடைந்தது.

இதில் பயணம் செய்த 3 கடற்படையினரும் ஒரு பொலிஸ் அதிகாரியும் படுகாயமடைந்த நிலையில் திருகோணமலை கடற்படை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து கடற்படையினர் நடத்திய துப்பாக்கிச்சூடு (12 ஆம் பக்கம் பார்க்க)

## சடலமாக ஈழவேந்தன்;

## வாக்கெடுப்பு இல்லாமலே

# சடலமாக ஈழவேந்தன்; நாடாளுமன்றில் ஒப்பாரி!

கொழும்பு—

வட கிழக்கில் அதிகரித்துவரும் தமிழ் மக்கள் மீதான படுகொலை, கைதுகள், ஆட்கடத்தல், மற்றும் இராணுவத்தினரின் அடாவடித்தனங்களை கண்டித்தும் தமிழ்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று 3 ஆவது நாளாகவும் நாடாளுமன்ற அமர்வை நடத்தவிடாது குழப்பத்தில் ஈடுபட்டனர்.

இதனால் நாடாளுமன்ற அமர்வுகளை நடத்த முடியாத சபாநாயகர் லொக்குபண்டார அவசர அவசரமாக அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒருவாரத்துக்கு நீடித்துவிட்டு 5 நிமிடத்துக்கு சபையை ஒத்திவைத்தார்.

நேற்றுகாலை 9.30 மணிக்கு நாடாளுமன்ற அமர்வு அரம்பமாக இருந்தது. இதன்போது வடக்கு -கிழக்கில் ஏற்பட்டுவரும் படுகொலை ஆட்கடத்தல் கைதுகள் மக்கள் மீதான துன்புறுத்தல்கள் என்பவற்றை கண்டித்தும் இவற்றினை (12 ஆம் பக்கம் பார்க்க)

# வாக்கெடுப்பு இல்லாமலே அவசரகாலச் சட்டம் நீடிப்பு!

கொழும்பு—

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எதிர்ப்பு போராட்டத்துக்கு மத்தியில் அவசரகாலச்சட்டம் வாக்கெடுப்பு நடத்தாமலேயே ஒரு மாத காலத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த அவசரகாலச் சட்ட நீடிப்புக்கு நாடாளுமன்றம் நேற்று ஒப்புதல் அளித்தது. இந்தச்சட்ட நீடிப்பைத் தடுக்கும் வகையில் சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டாரவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முற்றுகையிட்டனர். இருப்பினும் எதுவித வாக்கெடுப்பும் நடத்தாமலேயே அவசரகாலச்சட்டம் நீடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அவசரகாலச்சட்ட நீடிப்புக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் கடும் கண்டனம் தெரவித்தார்.

வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் அப்பாவி மக்கள் மீதான சித்திரவதை உச்சத்தை அடைந்துள்ளது. (12 ஆம் பக்கம் பார்க்க)

# சிறிய முன்னகர்வு ஏற்பட்டாலேயே பாரிய திருப்தியைக் கொடுக்கும்!

## எரிக் சொல்ஹெய்ம்

கொழும்பு—

இலங்கைக்கான விஜயத்தின் போது சிறியளவிலான முன்னகர்வு ஏற்பட்டாலேயே அது பாரிய திருப்தியைக் கொடுக்கும் என்று நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்தார்.

தனது இலங்கைப் பயணம் தொடர்பாக நேற்று ஊடகவியலாளர்களிடம் எரிக்சொல்ஹெய்ம் கூறியதாவது -

இந்தப் பயணத்தின்போது யுத்த நிறுத்தத்தை நிலைப்படுத்தல் தொடர்பாக இரு தரப்பினருக்கும் இடையே புரிந்துணர்வை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கை உள்ளது.

தற்போதைய பயணத்தின் போது ஒரு சிறிய அளவிலாவது முன்னகர்வு ஏற்பட்டாலே எமக்கு அது பாரிய திருப்தியளிக்கும்.

யுத்த காலத்தோடு ஒப்பிடுகையில் இந்தக் கொடூரமான வன்முறைகள் (12 ஆம் பக்கம் பார்க்க)

# பேச்சு நடத்தும் இடத்தை மகிந்தவே தெரிவுசெய்வார்



## அனைத்துக்கட்சி கூட்டத்தில் தீர்மானம்

கொழும்பு—

அரசு - விடுதலைப்புலிகளுக்கு இடையேயான சமாதானப் பேச்சுக்களை நடத்துவதற்கான இடத்தைத் தெரிவுசெய்வது குறித்து இறுதித்தீர்மானம் எடுக்கும் பொறுப்பு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடமே ஒப்படைக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பது தொடர்பாக அனைத்துக் கட்சிகளுக்கிடையே இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்கான மாநாடு நேற்றுக்காலை அலரி மாளிகையில் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்றது. தற்போது நெருக்கடி நிலைக்குள் (12 ஆம் பக்கம் பார்க்க)





ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்....

021-222 3891, 222 6297, 077-2349999, 011-2372952/3, 011 - 2360290/1

email:jaffna@expoavi.com, reservations@expoavi.com.

EXPOAiR

your friend in the skies...


இலங்கையில்
முன்னணி வகிக்கும்
உங்கள் உள்நூர்
விமாசேவை...



# தமிழகம் நோக்கி ஈழத்தமிழர் படையெடுப்பு

# மண்டபம் முகாம் நிரம்பும் நிலையில் சிறப்பு முகாம்கள் அமைக்க ஏற்பாடு





இராமேஸ்வரம்—

மன்னாரில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பிரதேசமான விடத்தல் தீவிலிருந்து மேலும் 3 குடும்பங்களைச் சேர்ந்த 9 ஈழத்தமிழ் அகதிகள் நேற்றுப் படகுமூலம் தனுஸ்கோடிக்குச் சென்றனர்.

இவர்களைத் தனுஸ்கோடி பொலிஸ் சப் - இன்ஸ்பெக்டர் ஆத்மநாதன் விசாரணை நடத்தி மண்டபத்திலுள்ள அகதிகள் முகாமுக்கு அனுப்பிவைத்தார்.

இவர்களில் பாலேந்திரன் (வயது 27), அவரது மனைவி நிர்மலா (வயது 24) இவர்களது குழந்தைகள் அருண், ஆகாஷ் மற்றும், செல்வபாலசிங்கம், அவரது மனைவி, 2 பெண் குழந்தைகள் உட்பட 9 பேர் மண்டப முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கைத்தமிழர்கள் அதிகம் வசிக்கும் பகுதியில் எப்போதும் குண்டுச் சத்தம் கேட்கத்தொடங்கிவிட்டது. எந்த நேரத்தில் உயிர் போகுமோ என்று பயந்து, பயந்து வாழ்வதை விட இருக்கிற காலத்தில் கொஞ்சக் காலமாவது நிம்மதியாக இருந்து விடுவோம் என்று ராமேஸ்வரத்துக்குத் தப்பி வந்துவிட்டதாக அவர்கள் கூறினர்.

இதேவேளை கடந்த புதன்கிழமை மன்னார் மாவட்டம் செல்வபுரம் கோவில் தோட்டத்தைச் சேர்ந்த 4 ஆண்கள், 4 பெண்கள், ஒரு ஆண் குழந்தை, 6 பெண் குழந்தைகள் உட்பட15 பேர் படகு மூலம் தனுஷ்கோடி அரிச்சல்முனை கடற்கரைக்கு நேற்று முன்தினம் காலை சென்றடைந்தனர்.

தற்போது மண்டபம் முகாமில் 221 குடும்பங்களைச் சேர்ந்த 826 பேர் அகதிகளாக உள்ளனர். மேலும், மேலும் அகதிகள் வந்த வண்ணம் உள்ளதால் இந்த முகாம் விரைவில் நிரம்பிவிடும் என்று கூறப்படுகிறது.

கடந்த 83 ம் ஆண்டு மண்டபம் அகதிகள் முகாமில் சுமார் 3 ஆயிரம் அகதிகள்வரை தங்கியிருந்தனர். அவர்கள் தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு பகுதிகளில் உள்ள முகாம்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

தற்போது மீண்டும் இதேபோன்ற சூழ்நிலை ஏற்படும் என்பதால் சிறப்பு அகதிகள் முகாம்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிகிறது.

அகதிகளாக வந்தவர்களில் தனது பெயர் குறிப்பிட விரும்பாத ஒரு இளைஞன் பேட்டியளிக்கையில் -

இலங்கையில் விடுதலைப்புலிகளின் கைதான் இப்போது ஓங்கியுள்ளது. எந்த நேரத்திலும் போரைச் சந்திக்க அவர்கள் தயாராக இருக்கிறார்கள். இந்த முறை போர் நடத்தி தனி ஈழம் பெற்றுத் தீரவேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறார்கள்.

மன்னாரில் செல்வபுரம் பகுதியில் தான் இராணுவக்கெடுபிடி அதிகமாக உள்ளது. எனவே எந்த நேரமும் போர் வெடிக்கும். இந்த முறை இலங்கை இராணுவம் தோற்பது உறுதி.

மேலும் விடுதலைப்புலிகள் மக்கள் படை என்ற புதிய அமைப்பைத் தயார் செய்து வைத்துள்ளார்கள்.

இதில் 10 ஆயிரம் இளைஞர்கள் பயிற்சி பெற்று போருக்கு தயாராக இருக்கிறார்கள் என்று அவர் கூறினார்.

## நாட்டுப்பற்றாளர் சாவடைந்தார்

கிளிநொச்சி—

சுகவீனம் காரணமாக நாட்டுப்பற்றாளர் ஒருவர் நேற்று முன்தினம் சாவடைந்தார்.

வவுனியா பன்றிக்கெய்த குளத்தை சொந்த இடமாகவும், விசுவமடுவைத் தற்காலிக இடமாகவும் கொண்ட அண்ணாமலை இராஜகோபால் என்ற நாட்டுப்பற்றாளரே சாவடைந்தவராவார்.

# மகாபொல கொடுப்பனவுக்குத் தெரிவான உயர் தொழில்நுட்ப நிறுவன மாணவர்கள்

யாழ்ப்பாணம் —

யாழ்ப்பாணம் தொழில் நுட்பவியல் நிறுவனத்தால் கடந்த வருடம் கற்கை நெறியை ஆரம்பித்த மாணவர்களில் 41 பேர் மகாபொல புலமைப் பரிசில் பெறுவதற்குத் தகுதி பெற்றுள்ளனர் என உயர் தொழில் நுட்ப நிறுவனத் தலைமையகம் அறிவித்துள்ளது.

நேற்றுமாலை தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பெயர்ப்பட்டியல் யாழ்.உயர் தொழில் நுட்பவியல் நிறுவனத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தெரிவானவர்களின் உறுதிப்படுத்தல் படிவம் இன்று அனுப்பப்பட வேண்டியுள்ளதால் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் அனைவரையும் இன்று காலை விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்வதற்காக வருமாறு உயர் தொழில் நுட்பவியல் நிறுவன மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

கோபாலன் - கோகுலன், நடராஜா - சுஜீவன், கதிரமலை - சரவணபவன், வத்சலா - செல்வநாயகம், சுதாசினி - தேவராஜா, லட்சா - விஜரட்ணம், றொசாந்தினி - தவராஜா, தியாகராஜா - விநோதா, துசிதா-சரவணபவாநந்தன், கமலசக்தி-மதியாபரணம், ஜெயநாயகம் - சாயீசன், நவீனா - சுப்பிரமணியம், கௌசிகா - ஏரம்பமூர்த்தி, ஞானகலா-ஞானசுந்தரம், நேசமலர் - சின்னப்பு, ஜெசிந்தினி - கோபாலகிருஷ்ணன், சுஜீபா - செல்வராஜா, சுபாஜினி - நாகரட்ணம், துவாரகா-மனோகரன், இந்திராதேவி-செல்வராஜா, வரப்பிரகாசம் - பிரபாகரன், இரீன்சர்மிளா - இன்னாசிமுத்து, சங்கீதா - துரைசிங்கம், ஜெயந்தினி-ஆறுமுகம், சுதர்மியா - பரமேஸ்வரன், நிலானி - சுப்பிரமணியம், சிந்துஜா - ராஜரட்ணம், ஆன் மக்லின், தாட்சாயினி - மரியதாஸ், மனோஜனி - ஜெகசோதி, ஜெயசுந்தரேஸ்வரா- சந்திரபாலு, மேனகா-கணேசலிங்கம், தமிழினி - சதீஸ்வரன், சோபிதா - ராசரட்ணம், டிலானி - சீமன், விஜிதா-செல்வராஜா, சசிகலா - செல்வரட்ணம், சிதம்பரநாதன் - ரங்கதாஸ், தியாகராஜா-சிவதீபம், துஸ்யந்தினி - நாகேஸ்வரன் ஆகிய மாணவர்கள் தெரிவாகியுள்ளனர்.

## உணவும் போசனையும் நூல் வெளியீடு

யாழ்ப்பாணம் —

'உணவும் போசனையும்' நூல் வெளியீட்டு விழா இன்று காலை 10 மணிக்கு கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ரதிலக்ஷ்மி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் அ.சிறிஸ்கந்தமூர்த்தி தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை பிரதம விருந்தினராகவும், முன்னாள் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் திலகவதி பெரியதம்பி சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

நூலின் வாழ்த்துரையை கலாநிதி க.சிவபாலனும், வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் க.சுப்பிரமணியம் நிகழ்த்தவுள்ளார்.

முதல் பிரதியை மானிப்பாய் இலங்கை வங்கிக் கிளையின் உதவி முகாமையாளர் ந.சச்சிதானந்தம் பெற்றுக்கொள்வார்.

## மண்ணெண்ணெய் குடித்த குழந்தை வைத்தியசாலையில்

யாழ்ப்பாணம் —

தண்ணீர் என நினைத்து மண்ணெண்ணெய் குடித்த ஒன்றரை வயதுக் குழந்தை மயக்கமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் புலோலி கிழக்கைச் சேர்ந்த பரமலிங்கம் லக்சனன் என்ற குழந்தையே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டது.

நேற்று மாலை 4 மணியளவில் தண்ணீர் குடிக்க நினைத்து போத்தலிலுள்ள மண்ணெண்ணெயைக் குடித்த இக்குழந்தை மயக்கமுற்றது.

உடனடியாக மந்திகை வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டது. (12)


## யாழ்ப்பாண பல்கலைக்கழகம் - இலங்கை

### கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீட தொகுதி திருத்தம்/ சேர்த்தல் மேம்படுத்தல்/ வெளிப்புற நிறப்பூச்சு வேலைகளுக்கான அரக்கிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் கட்டட நிர்மாண வேலைகளுக்கான இக்ராட் (ICTAD) நிறுவனத்தில் M 7 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரிடம் இருந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சிறிய கேள்விகள் சபைத் தலைவரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விப் பத்திரங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உதவிப் பதிவாளர் / நிர்வாகம் அவர்களிடம் இருந்து 06.02.2006 வரை செல்லுபடியான ஒப்பந்தகாரர் பதிவுப் புத்தகத்தையும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக காசாளர் கருமபீடத்தில் பின்வரும் வைப்பீடுகளுக்கான தொகையைப் பணமாகச் செலுத்திய பற்றுச்சீட்டையும் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

1. மீளளிக்கப்படும் வைப்புத் தொகை ரூபா 30000/=
2. மீளளிக்கப்படாத வைப்புத் தொகை ரூபா 500/=

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரங்கள் சீல் வைக்கப்பட்டு வேலையின் பெயரை உறையின் இடது மூலையில் குறிப்பிட்டு தலைவர் ,சிறுகேள்விகள் சபை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அவர்களுக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியினுள் இடப்படல் வேண்டும்.

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 13.02.2006 அன்று மாலை 2.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு உடனடியாக அதன்பின்னர் திறக்கப்படும். கேள்விதாரர்களோ அல்லது அவர்களால் அங்கீகரிக்கப்பட்டவர்களோ கேள்விப் பத்திரங்கள் திறக்கும்பொழுது பிரசன்னமாயிருக்க முடியும்.

தேவைப்படின் கேள்விப்பத்திரங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாகக்கிளையில் வழமையான அலுவலக நேரங்களில் கட்டணம் ஏதுமின்றி கேள்விதாரர்கள் பரீசீலிக்கமுடியும்.

*தபால் பெட்டி இல 57,*
*திருநெல்வேலி.*
*16.01.2006.* [C/5023] *பதிவாளர்,*
*யாழ்.பல்கலைக்கழகம்.*

## சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

இரண்டு வயது Great Dane ஆண் நாயும், British Bull dogo ஆண், பெண் நாய்களும் மலிவான விலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு :- 0777 491062. (2166)

### நோயாளிகளின் கவனத்திற்கு

உங்கள் வியாதிகள் கண்டு பிடிக்க முடியாதவையா? நாட்பட் டவையா? மாற்றமுடியாது என வைத்தியர்கள் பலர் கைவிரித்து விட்டார்களா?

கவலை வேண்டாம்! எங்களை நாடுங்கள். ஷென்மென் அக்குபன்சர் வைத்தியசாலை, தபால் பெட்டி சந்தி, பலாலி வீதி, திருநெல்வேலி. (மியூசிக் வேர்ல்ட் முன்பாக) (2166)

### தவறிவிட்டது

பொன்னாலையைச் சேர்ந்த கோபாலு கீர்த்தன் என்பவரின் 090 4020488 என்ற இலக்கமுடைய விசேட அடையாள அட்டை மூளாய்க்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து நமது ஈழநாடு பத்திரிகைக் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும் .கோ. கீர்த்தன் (2167)

மனோகரா யாழ்ப்பாணம்
இளைய தளபதி விஜய், திரிஷா (வருகிறான் வரிப்புலி நாதியாய்) மற்றும் பலர் நடிப்பில்

ஆதி
இயக்கம் ரமணா
தயாரிப்பு - S.A சந்திரசேகர் இசை -வித்தியாசாகர்
(இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு)
காட்சிகள்;- 10.30, 1.30, 4.30, 7.30. (புதிய நேரம்)

நாகதீஸ்வரா யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)
அல்டிமேட் ஸ்ரார் அஜித், லைலா, விவேக், பிரகாஸ்ராஜ் நடித்த
பரமசிவன்
அநேகரின் வேண்டுகோளுக்கு இணங்க நேரம் மாற்றப்பட்டுள்ளது.
காட்சிகள்;- 09.00, 12.30, மாலை 3.30, (புதிய நேரம்)

நிறைஞ்சனாஸ் சங்கானை
சிம்பு. கோபிகா மற்றும் பலர் நடித்த
தொட்டி ஜெயா
காட்சிகள் 11.00,2.30,5.30 (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்


காட்சி : பு.நே. 10.30, 2.15 மட்டும்.
ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

## ஆண்டுப் பொதுக் கூட்டம்

யாழ் சுகவாழ்வு நிலையத்தின் 2004 ஆம் ஆண்டிற்கான ஆண்டுப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 05.02.2006 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நிலைய மண்டபத்தில் இடம் பெறும் என்பதை சகல அங்கத்தவர்களிற்கும் அறியத் தருகின்றேன்.

(2168) செயலாளர்

# தனது குடும்பச் சொத்தாக ஐ.தே.கவை கருதுகிறார் ரணில்

## நவீன் திஸநாயக்க குற்றச்சாட்டு

கொழும்பு—

ஐக்கிய தேசியக் கட்சியை தனது குடும்பச் சொத்தாகக் கருதும் ரணில் விக்கிரமசிங்க ஒருபோதும் கட்சித் தலைவர் பதவியை விட்டு வெளியேற மாட்டார் என்று அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நவீன் திஸநாயக்க தெரிவித்தார்.

மிகப்பெரிய அரசியற் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியை ரணில் விக்கிரமசிங்க தனது குடும்பச் சொத்தாகக் கருதியே நடத்திவருகிறார்.

இப்படிச் செயற்படும் அவர்- ஒருபோதும் கட்சியின் தலைமைப் பதவியை விட்டுச்செல்வார் என்று நான் கருதவில்லை.

நெருங்கிய நண்பர்கள் சிலரை வைத்துக்கொண்டு கட்சியைக் கொண்டு செல்வதற்கு ரணில் விக்கிரமசிங்க எடுக்கும் முயற்சிக்கு வாழ்த்துத் தெரிவிப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# மகிந்தவின் ஆலோசகராக ரிரோன் பெர்னாண்டோ!

கொழும்பு—

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வெளிநாட்டு விவகாரங்களுக்கான ஆலோசகராக வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் ரிரோன் பெர்னாண்டோ நியமிக்கப்படவுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவையில் வெளிவிவகார அமைச்சுப் பொறுப்பை குறுகிய காலம் வகித்தவர் ரிரோன் பெர்னாண்டோ. அவரைத் தேசியப் பட்டியலிருந்து நீக்கியதையடுத்து அவர் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகினார்.



ரிரோன் பெர்னாண்டோவின் இடத்துக்கு கடற்படையின் முன்னாள் 2 ஆம் நிலை தளபதி வைஸ் அட்மிரல் மொகான் விஜே விக்கிரம நியமிக்கப்படக்கூடும் என்றும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

# தமிழ் ஊடகவியலாளர்கள் சித்திரவதை பாதுகாப்பு அமைச்சிடம் முறைப்பாடு!

கொழும்பு—

தமிழ் ஊடகவியலாளர்கள் மீதான சித்திரவதையைக் கண்டித்து பாதுகாப்பு அமைச்சுக்கு பல ஊடக அமைப்புகளின் சார்பாக முறைப்பாட்டுக் கடிதமொன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள இந்தக் கடிதத்தில் -

இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் செயலாளர் ஆர்.பாரதி, இலங்கை ஊடகவியலாளர்கள் சங்கத்தின் தலைவர் சரத் பாலசூர்யா, இலங்கை முஸ்லிம் ஊடகவியலாளர் பேரவையின் தலைவர் என்.எம்.அமீன், சுதந்திர ஊடக இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் சீதா ரஞ்சனி, ஊடகத் தொழிற் சங்கங்களின் கூட்டமைப்புச் செயலாளர் தர்மசிறி லங்கபெலி ஆகியோர் கையெழுத்திட்டுள்ளனர்.

தமிழ் ஊடக நிறுவனங்களில் தேடுதலை மேற்கொள்ளவும், தமிழ் ஊடகவியலாளர்களைக் கைது செய்யவும் அவசரகால சட்ட நடைமுறைகள் பயன்படுத்தப்படுகின்றன என்றும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் தகவல் அமைச்சால் வழங்கப்பட்ட அடையாள அட்டைகளும் கூட இத்தகைய கைது நடவடிக்கைகளின்போது நிராகரிக்கப்படுகின்றன. இந்தச் சூழ்நிலையானது ஊடகவியலாளர்களின் பணிச் சூழலை மட்டும் பாதிக்கவில்லை. அவர்கள் தங்கள் வதிவிடங்களில் வாழ்வதற்கும் ஆபத்தை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பாக தங்களுடன் விவாதிக்க வாய்ப்பளிக்க வேண்டும் என்றும் அந்த கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

கடந்த டிசம்பர் 15 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நமது ஈழநாடு அலுவலகத்தில் சோதனை.

டிசம்பர் 17 ஆம் திகதி கொழும்பு தினக்குரல் ஊடகவியலாளர் 12 மணிநேரம் தடுத்து வைக்கப்பட்டமை.

டிசம்பர் 19 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் அமைதி ஊர்வலத்தில் செய்தி சேகரித்த ஊடகவியலாளர்களை அரச படையினர் தாக்கியமை.

ஜனவரி 5ஆம் திகதியன்று புகைப்படம் எடுத்த வீரகேசரி மற்றும் தினக்குரல் ஊடகவியலாளர்கள் விசாரணைக்குட்படுத்தப்பட்டமை உள்ளிட்ட சம்பவங்களும் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

இதனிடையே ஊடகத்துறையினர் மீதான ஒடுக்குமுறைகளைக் கண்டித்து கண்டியில் கண்டன ஊர்வலம் நடத்தப்பட்டுள்ளது.

சுதந்திர ஊடக இயக்கத்தின் பேச்சாளர் சுனந்த தேசப்பிரிய மற்றும் ஊடகவியலாளர் இயக்கங்களின் நிர்வாகிகள் சனத் பாலசூர்ய, பொட்டல ஜயந்த, கசுன்யாப்ப கருணாரட்ண, தர்மசிறி லங்கபெலி உள்ளிட்ட பலர் இந்தப் பேரணியில் கலந்து கொண்டனர்.

கண்டி மற்றும் நுவரெலியா ஊடகவியலாளர் சங்கங்களும் இந்தப் பேரணியில் இணைந்து கொண்டன. சுயாதீனமாகச் செயற்படும் ஊடகவியலாளர்கள் மீதான பொலிஸ் மற்றும் படைத்தரப்பின் ஒடுக்குமுறைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் பதாகைகளும் இந்தப் பேரணியில் ஏந்திச்செல்லப்பட்டன.

# சமாதான பேச்சுக்குமுன் புதிய அரசியல் யாப்பு!

## ஹெல உறுமய வலியுறுத்து

கொழும்பு—

இனப்பிரச்சினைக்கு ஒற்றையாட்சிக்குள் தீர்வு காண்பதை விவரிக்கும் புதிய அரசியல் யாப்பை உருவாக்க வேண்டும் என்று ஜாதிக ஹெல உறுமய வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடனான சந்திப்பின்போது ஜாதிக ஹெல உறுமயவினர் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தியுள்ளனர்.

இந்த புதிய அரசியல் யாப்பின் மூலவடிவம் அனைத்துக் கட்சி கூட்டத்திலும் முன்வைக்கப்படவேண்டும் என்றும், அரசியல் கட்சிகளின் யோசனைகளையும் அதில் இணைத்துக்கொள்ளலாம் என்றும் ஹெல உறுமயவின் நாடாளுமன்ற குழுத்தலைவர் அத்துரலிய ரத்னதேரர் கூறியுள்ளார்.

புதிய அரசியல் யாப்புக்கான குழுவானது இந்திய ஆட்சி முறை உள்ளிட்டவற்றிலிருந்து படிப்பினைகள் பெறலாம் இதன் மூலம் எதன் அடிப்படையில் இறுதித் தீர்வுகாணப்படும் என்பதை நாட்டுக்கும், சர்வதேசத்துக்கும் விளக்கமுடியும்.

விடுதலைப் புலிகளின் வன்முறைகளிலிருந்து படையினரையும், மக்களையும் பாதுகாக்க அரசாங்கம் தவறிவிட்டது.

படையினரை ஆத்திரமூட்டும் வகையிலான தாக்குதல்களை விடுதலைப்புலிகள் மேற்கொண்டபோதும், உயிரிழப்புகள் ஏற்பட்டபோதும் ஆகக்கூடிய பொறுமையுடன் அதற்கு இராணுவம் முகம்கொடுக்க வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# எஸ்.பியின் நாடாளுமன்ற பதவி குறித்து தேர்தல் ஆணையாளர் கருத்தைப்பெற முடிவு

கொழும்பு—

நாடாளுமன்றத்தை அவமதித்த குற்றத்துக்காகச் சிறைத் தண்டனை அனுபவித்து வரும் முன்னாள் அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்கவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியின் சட்ட அங்கீகாரம் தொடர்பாக தேர்தல் ஆணையாளரின் கருத்தை அறிந்து கொள்வதற்கு அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக தேர்தல் ஆணையாளர் முடிவை எடுப்பதற்காக எஸ்.பி. திஸநாயக்கவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி குறித்த நாடாளுமன்றச் செயலாளர் வசமிருக்கும் ஆவணங்களின் பிரதிகளை தேர்தல் ஆணையாளர் அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கவும் நேற்று முன்தினம் நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தின் அனுமதியைப் பெறாமல் தொடர்ச்சியாக 3 மாதங்கள் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு, நாடாளுமன்ற செயலாளர் பிரியாணி விஜேசேகர கடந்த மார்ச் மாதம் தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பி வைத்த கடிதத்தின் பிரதியும், கட்சித்தலைவர்களின் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டது.

கட்சித் தலைவர்களின் கூட்டம் நடைபெற்றபோது அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தேர்தல் ஆணையாளருடன் தொலைபேசியினூடாகத் தொடர்புகொண்டு இது பற்றி உரையாடினார்.

அது தொடர்பான ஆவணங்களைத் தனக்கு அனுப்பி வைக்குமாறு அமைச்சருக்கு தேர்தல் ஆணையாளர் அறிவித்தல் விடுத்தார்.

அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே, ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய, எதிர்க் கட்சியின் பிரதான அமைப்பாளர் மஹிந்த சமரசிங்க, ஜே.வி.பி, நாடாளுமன்றக் குழுத்தலைவர் விமல் வீரவன்ச, ஜாதிக ஹெல உறுமய நாடாளுமன்றக் குழுத் தலைவர் அத்துரலியே ரத்னதேரர் ஆகியோர் இந்தக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இதற்கு முன்னர் நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தின்போது எஸ்.பி.திஸநாயக்கவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி குறித்து ஜே.வி.பி நாடாளுமன்றக் குழுத் தலைவர் விமல் வீரவன்ச கேள்வி எழுப்பினார்.

அந்தக் கூட்டத்துக்குத் தலைமைவகித்த பிரதி சபாநாயகர் கீதாஞ்சன குணவர்த்தன இது தொடர்பாகச் சபாநாயகர் 17ஆம் திகதி நாடாளுமன்றத்தில் தெரிவிப்பார் என்று கூறியிருந்தார்.

அரசியலமைப்பின் படி எஸ்.பி.திஸநாயக்கவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி ரத்துச் செய்யப்பட வேண்டியுள்ள போதிலும், அது தொடர்பாக நாடாளுமன்றச் செயலாளர் உரிய வகையில் செயற்பாடுகளை மேற்கொள்ளவில்லையென்றும் அந்தக் கூட்டத்தில் விமல் வீரவன்ச குற்றம் சாட்டியிருந்தார்.

இதனிடையே சிறைச்சாலை அனுமதிப்பத்திர முறையின் கீழ் விடுதலையாவதற்காக முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க முன்வைத்த விண்ணப்பம் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அனுமதிச் சபையின் கூட்டத்தில் எடுத்துக் கொள்ளப்படவில்லை என்று தெரிகிறது.

உயர்தரப்பிலிருந்து கிடைக்கப்பெற்ற உத்தரவுக்கமைய கடைசி நேரத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

குற்றவியல்சட்டத்தின் ஒழுங்குகளுக்கமைய அனுமதிப்பத்திர முறையின்கீழ் விடுதலை பெறுவதற்கு எஸ்.பி.திஸநாயக்க தகுதி பெற்றிருந்ததால் அவரின் விண்ணப்பத்தை சிறைச்சாலை அதிகாரி- சில வாரங்களுக்கு முன்னர் சிறைச்சாலை அனுமதிப் பத்திரச் சபைக்குச் சமர்ப்பித்திருந்தார்.

இதற்கமைய இந்த விண்ணப்பம் நேற்று முன்தினம் அனுமதிப் பத்திர சபை கூடியபோது விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட இருந்தது. ஆனால், நேற்று இது சபைக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

இந்த சபை மாதத்துக்கு ஒரு முறை கூடுகிறது. எஸ்.பி. திஸநாயக்க விண்ணப்பத்தைச் சமர்ப்பித்த பின்னர் நேற்றுத்தான் இந்தச் சபை முதல்முறையாகக் கூடியது.

சிறைச்சாலை அனுமதிச் சபைக்கு அவரின் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படாமையால் தண்டனைக்காலம் நிறைவடைவதற்கு முன்னர் பிணையில் விடுதலையாவதற்கு எஸ்.பி.திஸநாயக்கவுக்கு இருந்த வாய்ப்புக் கைநழுவியுள்ளதாக சிறைச்சாலை வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.



# புலிகளை எதிரிகளாக அணுகினால் பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியாது

## பிரபா கணேசன் தெரிவிப்பு

கொழும்பு—

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை எதிரியாக சிங்களவர்கள் அணுகினால் இனப் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது என்று மேல் மாகாண சபை உறுப்பினர் பிரபா கணேசன் தெரிவித்தார்.

மேல் மாகாண சபையில் ஐக்கிய தேசியக் கட்சியின் சிறிகமல் டி சில்வா மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் சட்ட முன்வடிவைத் தாக்கல் செய்தார்.

இந்த சட்ட முன்வடிவு குறித்து பிரபா கணேசன் பேசியதாவது-

பிரபாகரன் ஒட்டுமொத்த தமிழர்களின் பிரதிநிதி. அவரை எதிரியாக அணுகக்கூடாது. கூட்டாட்சி முறையிலான தீர்வை நிராகரிப்பதன் மூலம் ஜே.வி.பியும், ஜாதிக ஹெல உறுமயவும் நாட்டை போருக்குத் தள்ளிச் செல்கின்றன எனத் தெரிவித்தார்.

இங்கு ஜே.வி.பி. உறுப்பினர்களின் தலைவர் வருணதீப்த ராஜபக்ஷ பேசியபோது -

பேச்சுக்கான இடம் என்பது முக்கிய பிரச்சினை. ஐரோப்பிய ஒன்றியத்துடனான உறவுக்காக அங்கு பேச்சுக்களை நடத்த வேண்டும் என்று விடுதலைப் புலிகள் வலியுறுத்துகின்றனர். அதனால் ஆசிய நாடுஒன்றிலே பேச்சுகள் நடத்தப்படல்வேண்டும். இதை மகிந்த ராஜபக்ஷ உணர்ந்துள்ளார் எனத் தெரிவித்தார்.

### சந்திரிகாவுக்கு எதிரான வழக்கு இரண்டு நீதிபதிகள் விலகினர்!

கொழும்பு—

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகளவிலான வசதி வாய்ப்புகள் குறித்து தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரணை செய்யும் நீதிபதிகள் குழுவிலிருந்து இரண்டு நீதியரசர்கள் விலகியுள்ளனர்.

மூன்று நீதிபதிகளைக்கொண்டு இந்த விசாரணைகள் இடம்பெற்று வந்தன. இந்த நிலையில் நேற்று முன்தினம் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது நிஹால் ஜெயசிங்க, காமினி அமரதுங்க ஆகிய நீதியரசர்கள் சமூகமளிக்கவில்லை. இதனையடுத்து புதிய நீதியரசர்களைக்கொண்டு எதிர்வரும் 26 ஆம் திகதி வழக்கு விசாரணை நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது. (01)

### தாக்குதல் அச்சத்தால்

# மைக்ரோ சொப்ட் அலுவலகம் கோட்டையிலிருந்து மாறியது!

கொழும்பு—

கொழும்பில் வர்த்தக மையங்களை இலக்குவைத்து தாக்குதல்கள் நடைபெறக்கூடும் என்று தகவல்கள் வெளியானதையடுத்து மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் இலங்கை கிளை அலுவலகம் இடமாற்றப்பட்டுள்ளது.

கொழும்பு கோட்டையில் உலக வர்த்தக மையத்தில் 31 ஆம் மாடியில் இந்த அலுவலகம் இயங்கிவந்தது.

கடந்த திங்கட்கிழமை காலையில் இந்த அலுவலகம் மூடப்பட்டு, பம்பலப்பிட்டி பகுதியில் ஒரு சிறிய இடத்தில் இயங்கி வருகிறது.

தைப் புத்தாண்டு நாளிலிருந்து 72 மணி நேரத்துக்குள் கொழும்பின் வர்த்தக மையங்களை விடுதலைப் புலிகள் தாக்குவார்கள் என்று கடந்த ஞாயிற்றுக்கிழமை பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டதையடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இருப்பினும் மைக்ரோ சொப்ட் நிர்வாகம் இதை மறுத்துள்ளது. தமது ஊழியர்களின் பயிற்சிப் பட்டறைக்காகவே இந்த இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அந்த நிறுவன அதிகாரிகள் தெரிவித்தனர்.

# டெஸ்ட் தர வரிசைப் பட்டியல்; நான்காவது இடத்தில் ராவிட்!



டுபாய்—

டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் துடுப்பாட்ட தர வரிசையில் இந்திய அணி கப்டன் ராவிட் 4 ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் அடிப்படையில் வீரர்களின் வரிசைப் பட்டியலை சர்வதேச கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது.

துடுப்பாட்ட வரிசையில் இந்திய அணி கப்டன் ராகுல் ராவிட் 4 ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார். பாகிஸ்தானுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் சதம் அடித்ததன் மூலம் கூடுதலாக 22 புள்ளிகள் பெற்று இவர் 4 ஆவது இடத்துக்கு முன்னேறினார்.

ராவிட் மொத்தம் 858 புள்ளிகள் பெற்றுள்ளார். அதே புள்ளி கள் (858) பெற்றுள்ள அவுஸ்ரேலிய வீரர் ஹைடனும் 4 ஆவது இடத்திலுள்ளார்.

அவுஸ்ரேலிய அணி கப்டன் ரிக்கி பொண்டிங் 922 புள்ளிகளுடன் முதலிடத்திலுள்ளார். தென்னாபிரிக்க வீரர் கலிஸ் இரண்டாவது இடத்திலும், மேற்கிந்திய வீரர் லாறா மூன்றாவது இடத்திலும் உள்ளார்.


இந்திய அணியின் தொடக்க ஆட்டக்காரர் ஷேவாக் பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்டில் 254 ஓட்டங்களைக் குவித்ததன் மூலம் அவர் கூடுதலாக 52 புள்ளிகள் பெற்றுள்ளார். ஷேவாக் மொத்தம் 838 புள்ளிகள் பெற்று ஏழாவது இடத்திலுள்ளார். பாகிஸ்தான் வீரர் முகமட் யூசுப் எட்டாவது இடத்திலும், இங்கிலாந்து வீரர் டிரெஸ் கோதிக் ஒன்பதாவது இடத்திலும்,பாகிஸ்தான் வீரர் யுனூஸ்கான் 10 ஆவது இடத்திலுமுள்ளனர்.

பந்து வீச்சில் அவுஸ்ரேலிய வீரர் மக்ரா 853 புள்ளிகளுடன் முதலிடத்திலுள்ளார். முரளிதரன் (இலங்கை), வோன் (அவுஸ்ரேலியா), அக்தர் (பாகிஸ்தான்), பிளின்ரொப் (இங்கிலாந்து), என்ரினி (தென்னாபிரிக்கா), வாஸ் (இலங்கை), ஆந்ரேநெல் (தென்னாபிரிக்கா), கும்ளே (இந்தியா), பொலக் (தென்னாபிரிக்கா) ஆகியோர் முறையே 2 முதல் 10 இடங்களைப் பிடித்துள்ளனர்.

சிறந்த சகலதுறை ஆட்டக்காரர் வரிசைப் பட்டியலில் தென்னாபிரிக்க வீரர் கலிஸ் 496 புள்ளிகளுடன் முதலிடத்திலுள்ளார். இங்கிலாந்து வீரர் பிளின்ரொப் 454 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும், தென்னாபிரிக்க வீரர் பொலக் 340 புள்ளிகளுடன் 3 ஆவது இடத்திலும், இந்திய வீரர் பதான் 290 புள்ளிகள் பெற்று 4 ஆவது இடத்திலும், நியூசிலாந்து வீரர் விற் றோரி 279 புள்ளிகள் பெற்று 5 ஆவது இடத்திலுமுள்ளனர்.




# பந்துவீச்சாளர்களுக்கு ஏற்ப ஆடுகளங்கள் மாற்றப்படும்!



## சஹாரியார் கான் உறுதி

பைசலாபாத்—

துடுப்பாட்டத்துக்கு மட்டுமல்லாது பந்து வீச்சாளருக்கும் ஏற்றவகையில் ஆடுகளங்களை மாற்றியமைக்க முயற்சி மேற்கொள்ளப்படுமென பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் சஹாரியார்கான் உறுதியளித்துள்ளார்.

இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியில் இரு அணி வீரர்களும் விளையாடியதைப் பார்த்ததிலிருந்து கடாபி மைதானம் பந்துவீச்சாளர்களுக்கு எதிரானது என்பது உறுதியானது. இரு அணிகளும் முதல் இனிங்ஸைக் கூட முழுமையாக நிறைவு செய்யவில்லை. ஆனால், ஆயிரத்துக்கும் மேலான ஓட்டங்கள் குவிக்கப்பட்டுள்ளன. முதலாவது டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிந்தது.

முடிவு குறித்து, இந்திய அணியின் கப்டன் ராகுல் ராவிட்டும் பாகிஸ்தான் அணியின் கப்டன் இன்சமாம் உல் ஹக்கும் ஏமாற்றம் தெரிவித்தனர். கடாபி ஆடுகளத்தின் தன்மை குறித்து கிரிக்கெட் ஆர்வலர்களிடம் கடும் சர்ச்சை எழுந்துள்ளது.

இந்த நிலையில் பாகிஸ்தானிலிருந்து வெளிவரும் தி நியூஸ் பத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டியில் சஹாரியார்கான் கூறியதாவது -

லாகூரில் நிலவிய குளிர்ச்சியான பருவ நிலையால், தொழிலாளர்கள் ஆடுகளத்தைச் சிறந்த முறையில் தயார்ப்படுத்த முடியவில்லை. என்றாலும் யாரையும் குறைகூற விரும்பவில்லை.

பாகிஸ்தானிலுள்ள ஆடுகளங்களின் தன்மை குறித்து கள வடிவமைப்பு வல்லுநர்கள் மற்றும் முன்னாள் வீரர்களுடன் விரைவில் கலந்தாலோசிக்கவுள்ளோம். தேவைப்பட்டால் உடனடியாக ஆடுகளத்தை மாற்றியமைக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

எதிர்வரும் கோடை காலத்தில் பாகிஸ்தானில் உள்ளூர் ஆட்டங்களும், சர்வதேச ஆட்டங்களும் அதிகளவில் நடைபெறவுள்ளன. அதற்குள் டெஸ்ட் போட்டிகளுக்கும் ஏற்ற வகை யில் ஆடுகளம் மாற்றியமைக்கப்படும். பந்துகள் திரும்பும் படியாக ஆடுகளம் அமைக்கப்படும்.

அப்போதுதான் பந்து வீச்சாளர்களுக்கு ஆவல் ஏற்படும். அதன் மூலமே சிறந்த வீரர்களையும், விளையாட்டையும் ரசிகர்கள் காணமுடியும். லாகூர் போட்டி போல மற்றைய இரண்டு போட்டிகளும் இருக்க நான் விரும்பவில்லை என்று சஹாரியார் கான் மேலும் தெரிவித்தார்.

# ஷேவாக்கின் அதிரடி ஆட்டத்தை முறியடிப்பதற்கு புதிய வியூகம்!

## இன்சமாம் தெரிவிப்பு



லாகூர்—

இந்திய வீரர் ஷேவாக்கின்அதிரடி ஆட்டம் எம்மை நிலைகுலையச் செய்துள்ளது. இதனால் அவரது அதிரடி ஆட்டத்தைத் தடுப்பது எப்படி என்பது குறித்து புதிய வியூகம் வகுத்துள்ளதாக பாகிஸ்தான் அணித் தலைவர் இன்சமாம் தெரிவித்தார்.

இந்தியக் கிரிக்கெட் அணியின் அதிரடி ஆட்டக்காரர் ஷேவாக் சமீபத்தில் நடந்த பாகிஸ்தானுக்கு எதிரான முதல் டெஸ்டில் 254 ஓட்டங்களைக் குவித்தார்.

பாகிஸ்தானுக்கு எதிராக இதுவரை மொத்தம் 7 டெஸ்ட் போட்டிகளில் ஆடியுள்ள ஷேவாக் 4 சதங்களுடன் 1,236 ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.

இவரது சராசரி 112.36 ஆகும். இந்த நிலையில் இந்திய - பாகிஸ்தான் அணிகள் இடையிலான 2-வது டெஸ்ட் போட்டி நாளை பைசலாபாத்தில் தொடங்கவுள்ளது.

இதற்கிடையில் ஷேவாக்கின் அதிரடி ஆட்டம் குறித்து பாகிஸ்தான் அணி கப்டன் இன்சமாம் கூறியதாவது -


முதல் டெஸ்டில் பாகிஸ்தான் பந்து வீச்சை எந்தவிதமான பதற்றமுமின்றி ஷேவாக் அடித்து ஆடியது உண்மைதான். ஆடுகளம் துடுப்பாட்டத்துக்கு சாதகமாக இருந்தது.

எனினும், ஷேவாக் இவ்வளவு ஆக்ரோஷமாக ஆடி எங்களுக்கு நெருக்கடியளிப்பார் என நினைக்கவில்லை. அடுத்த டெஸ்டிலும் இது தொடர்ந்து விடுமோ? என்ற அச்சமும் உள்ளது.

ஷேவாக்கின் அதிரடி ஆட்டத்தைத் தடுப்பது எப்படி என்பது குறித்து நாங்கள் கூடி ஆலோசித்தோம். அதன்படி ஷேவாக்கை விரைவில் ஆட்டமிழக்கச் செய்ய புதிய வியூகம் அமைத்துள்ளோம் என இன்சமாம் தெரிவித்தார்.

# தொடக்க வீரராக ராவிட் தற்காலிகமான முடிவே!

## வசிம் அக்ரம் கருத்து



லாகூர்—

லாகூரில் நடைபெற்ற டெஸ்ட்டில் ராவிட் தொடக்க வீரராகக் களம் இறங்கியது சரியான முடிவாக இருந்தாலும் - இது தற்காலிகமானதாகவே இருக்கும் என பாகிஸ்தான் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் வசிம் அக்ரம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

இந்திய - பாகிஸ்தான் போட்டியில் எப்போதும் ஒரு தனி விறுவிறுப்பு இருக்கும். ஆனால் லாகூர் டெஸ்டில் அது இல்லை. காரணம் வானிலை, ஆடுகளம் இரண்டுமே மோசம். வெளிச்சமின்மையால் பெரும்பாலான ஆட்டம் பாதிக்கப்பட்டது.

துடுப்பாட்டத்துக்கு மட்டுமே சாதகமான ஆடுகளத்தால் ஆட்டம் சமநிலையானது.

லாகூர் ஆடுகளம் பல்வேறு சாதனைகளை முறியடிப்பதற்காகவே அமைக்கப்பட்டது போலிருந்தது. இதை சேவாக், ராவிட் நன்கு பயன்படுத்திக் கொண்டார்கள். இந்தக் கூட்டணி ஒரு சில சாதனைகளை முறியடித்தாலும், வெறும் 4 ஓட்டங்களில், அதிக ஓட்டம் எடுத்த தொடக்க ஜோடி என்ற உலக சாதனையைத் தவறவிட்டது பரிதாபமாக இருந்தது. பாகிஸ்தானுக்கு எதிராக எப்போதும் அதிரடியாக ஆடும் சேவாக் இம்முறையும் தனது விளாசலை வெளிப்படுத்தத் தவறவில்லை.

லாகூர் டெஸ்டில் இரட்டைச் சதம் அடித்திருப்பதால், இவரது தன்னம்பிக்கை பல மடங்கு உயர்ந்திருக்கும்.

தொடக்க ஆட்டக்காரராக கப்டன் ராகுல் ராவிட்டின் யோசனை பாராட்டத்தக்கது. ஆனால் இவர் தொடக்க ஆட்டக்காரராக வருவது தற்காலிகமாக இருக்கும் என நம்புகிறேன். இவருக்கு ஏற்ற இடம் முதல் விக்கெட்டுக்குக் களமிறங்குவது தான்.

அடுத்த போட்டி நடக்கவிருக்கும் பைசலாபாத்திலும், லாகூரைப் போலவே அதிக குளிர் இருக்கும். இங்காவது பாகிஸ்தான் கிரிக்கெட்சபை சிறந்த ஆடுகளத்தை அமைக்கும் என எதிர்பார்க்கிறேன். பந்து வீச்சாளர்களுக்குச் சாதகமான ஆடுகளம் அமைத்தால், பாகிஸ்தானுக்கு வெற்றி வாய்ப்பு அதிகம் இருக்கும்.

# மழையின் குறுக்கீட்டாலேயே லாறாவின் சாதனை தப்பியது!

## பாகிஸ்தான் முன்னாள் அணித் தலைவர் மியாண்டட்



பைசலாபாத்—

பைசலாபாத் - இக்பால் அரங்கில் வேகப்பந்து வீச்சுக்குச் சாதகமான ஆடுகளம் அமைக்கப்படும் என நம்புகிறேன். இந்திய அணியை விட பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சில் பலம் மிகுந்து இருப்பதால் இதற்கு வாய்ப்புக்கள் நிறைய இருக்கின்றன என பாகிஸ்தானின் முன்னாள் அணித் தலைவர் மியாண்டட் தெரிவித்தார்.

லாகூர் டெஸ்டில் பாகிஸ்தான் அணி முதல் இனிங்ஸில் 679 ஓட்டங்களைக் குவித்தபோதிலும், கப்டன் ராவிட், சேவாக் இணைந்து இந்திய அணியை நெருக்கடியிலிருந்து மீட்டு விட்டார்கள். சேவாக் கின் ஆட்டத்தைப் பார்க்கும்போது, கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன் நடந்த முல்டான் போட்டியை ஞாபகப்படுத்தியது. அப்போது இவர் 309 ஓட்டங்களைக் குவித்தார். இம்முறையும் 300 ஓட்டங்களுக்கு மேல் எடுப்பார் என எதிர்பார்த்தேன்.

ஆனால், மோசமான வானிலை அவரது அதிரடியைத் தடுத்து விட்டது. கடைசி நாள் ஆட்டத்தை மழை மட்டும் குறுக்கிடாமலிருந்திருந்தால், லாறாவின் 400 ஓட்ட உலக சாதனையைக் கூட முறியடித்திருப்பார் சேவாக்.

இந்தப் போட்டியில் ராவிட் ஒரு சிறந்த கப்டனுக்கு உதாரணமாகச் செயற்பட்டார். இவரது நிலையில் வேறு எந்தக் கப்டனாக இருந்தாலும் விக்கெட் காப்பாளரையோ அல்லது நடுத்தரத் துடுப்பாட்டக் காரரையோ தொடக்க ஆட்டக்காரராக அனுப்பியிருப்பார்.

ஆனால், ராவிட் தானே பொறுப்பை ஏற்று, ஆட்டத் தைத் தொடங்கியது அருமை. அதிலும் அட்டகாசமாக ஓட்டங்களை எடுத்தது அதைவிட அருமை. ஆனால் பைசலாபாத்திலும் தொடக்க ஆட்டக்காரராகக் களமிறங்கினால் இதே போன்று சிறப்பாக ஓட்டங்களைக் குவிக்கலாம் என்பது மட்டும் நிச்சயமில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

# அவுஸ்ரேலிய ஓபன் ரெனிஸ்; சறுக்கினார் சானியா மிர்சா!



மெல்போர்ன்—

மெல்போர்ன் நகரில் நடைபெற்றுவரும் அவுஸ்ரேலிய ஓபன் ரெனிஸ் பேட்டியின் இரண்டாம் நாள் ஆட்டத்தில் இந்திய வீராங்கனை சானியா அதிர்ச்சித் தோல்வியடைந்தார்.

இந்த ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் பேட்டியான அவுஸ்ரேலிய ஓபன் டெனிஸ் போட்டி மெல்போர்ன் நகரில் நடைபெற்றுவருகிறது. இதன் 4 வது நாளான நேற்று ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவில் 2-வது சுற்று ஆட்டங்கள நடைபெற்றன.

பெண்கள் பிரிவில் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் உலகின் 2-ஆம் நிலை வீராங்கனையான கிம் கிளைஸ்டர்ஸ் (பெல்ஜியம்), சீன வீராங்கனை மேங்குடன் மோதினார்.

இதில் கிளைஸ்டர்ஸ் 6-4, 6-2 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்று 3-வது சுற்றுக்குக்குள் நுழைந்தார்.

மற்றொரு ஆட்டத்தில் இந்திய வீராங்கனை சானியா, தர வரிசையில் 42-வது இடத்தில் உள்ள நெதர்லாந்து நாட்டு வீராங்கனை மிச்செல்லா கிரஜிக்குடன் மோதினார். இந்த ஆட்டத்தின் செட்டை சானியா 3-6 என இழந்தார்.

அடுத்த செட்டும் சானியாவுக்கு போராட்டமாக இருந்தது. இதில் சானியா 5-7 என்ற கணக்கில் தோல்வி கண்டார். முடிவில் அவர் 3-6, 5-7என்ற நேர்செட்டில் அதிர்ச்சி தோல்வியடைந்தார்.

மற்ற ஆட்டங்களில் நிக்கோலி வைடசோவா, மௌரிஸ்மோ, சிண்டர், அனசிஸ்டா, மிஸ்கினா ஆகியோர் வெற்றிபெற்று 3-வது சுற்றுக்கு முன்னேறினர்.

ஆண்கள் பிரிவில் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் உலகின் முதல் நிலை வீரரும், சுவிட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்தவருமான ரோஜர் பெடரர், ஜேர்மனி நாட்டைச் சேர்ந்த புளோரைன் மேயருடன் மோதினார். இதில் பெடரர் 6-1, 6-4, 6-0 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்று 3-வது சுற்றுக்குள் நுழைந்தார்.

# கற்றலுக்கேற்ற இயல்புநிலையை ஏற்படுத்தவேண்டியது அரசின் பொறுப்பு

## துணைவேந்தர் எஸ்.மோகனதாஸ்

யாழ்ப்பாணம்—

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுக்கான கற்றலுக்கேற்ற இயல்பான சூழ்நிலையை உருவாக்கிக் கொடுக்கவேண்டியது இலங்கை அரசின் தலையாய கடமையென - யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக்கழக மாணவரின் கற்றல் செயற்பாடுகள் மற்றும் அவர்களது பகிஷ்கரிப்புத் தொடர்பாக பி.பி.சி. செய்திச் சேவைக்கு வழங்கிய பேட்டியொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில்-

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் வெளியிடப்பட்டிருக்கின்ற கற்றல் புறக்கணிப்புத் தொடர்பான அறிக்கை சம்பந்தமாக நாம் - பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு, கல்வி அமைச்சின் செயலாளர், ஜனாதிபதியின் செயலாளர், அரச அதிபர் ஆகியோருக்கு தெரியப்படுத்தியிருக்கிறோம். அவர்கள் இந்த விடயம் தொடர்பாகக் கூடிய கவனம் செலுத்தவேண்டும்.


யாழ்ப்பாணத்தில் தற்போது ஏற்பட்டிருக்கின்ற சூழ்நிலையில், மாணவர்களால் தமது இயல்பான கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்ளமுடியாது இருக்கின்றது.

இந்த நிலையிலும், முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, கிளிநொச்சி, மட்டக்களப்பு போன்ற மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் கடந்த 16 ஆம் திகதிக்கு முன்னரே தமது கற்றல் நடவடிக்கைகளை நிறுத்திவிட்டனர்.

இத்தகைய மாணவர்கள் ஏ-9 வீதியூடாகவே பல்கலைக்கழகத்துக்கு வந்து தமது கல்வியைத் தொடரவேண்டும். ஆனால், இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அதிகரித்த வன்முறைகள் காரணமாக மாணவர்கள் தமது கல்விச் செயற்பாட்டை மேற்கொள்ள தயங்குகின்ற அதேவேளை -

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்களும், தம்மீது இராணுவம் மேற்கொண்டு வருகின்ற அராஜகச் செயற்பாடுகளை நிறுத்தி, இயல்பான நிலை தோன்றும்வரை தாம் கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாது இருப்பதாகத் தெரிவிக்கின்றனர்.

இராணுவக் கெடுபிடிகள் காரணமாக ஏற்பட்டுள்ள அச்சத்திலேயே மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்கு வருவதில்லை. இந்த நிலையை மாற்றுவதற்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து, மாணவர்கள் தமது கல்வியைத் தொடர்வதற்கான இயல்பான நிலை வந்தால், இந்தப் புறக்கணிப்புத் தளர்க்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.



மாணவரின் கற்றல் புறக்கணிப்புகளில் விடுதலைப் புலிகள் தொடர்புபட்டு இருக்கின்றனர் எனப் பலர் கூறிவருகின்றனர். இது தவறான ஓர் விடயமாகும். தமிழ்ச் சமூகமே மாணவர்கள் இயல்பான ஓர் சூழலிலே கல்வி கற்கவேண்டுமென விருப்பம் தெரிவிக்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார்.

## இறுவட்டு வெளியீட்டு விழா

குருநகர்—

குருநகர் ஜேம்ஸ் இசைக்குழுவினரின் 'வேண்டுகிறேன்' இசை இறுவட்டு வெளியீடு நாளை மாலை 4 மணிக்கு குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

திருமறைக் கலாமன்ற இயக்குனர் அருட்தந்தை மரியசேவியர் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் - ஆய்வுரையை ஏ.ஆர்.விஜயகுமாரும், வெளியீட்டுரையை திருமறை கலாமன்ற இணை இயக்குனர் செ.ஜெகனும் நிகழ்த்தவுள்ளனர்.

முதல் பிரதியை குருநகர் பங்குத்தந்தை அருட்தந்தை ஆர்.எச்.சகாயநாதன் பெற்றுக்கொள்ளவுள்ளார்.

## மகா கும்பாபிஷேக பெருவிழா


சுதுமலை—

சுதுமலை தெற்கு ஆனைக்கோட்டை அருள்மிகு ஸ்ரீமுத்துமாரியம்பாளின் மகா கும்பாபிஷேகப் பெருவிழா இன்று காலை 10 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத்தையொட்டிய ஆரம்ப கிரியைகள் நேற்று முன்தினம் மாலை 5 மணிமுதல் ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றன.

# மாணவர்களை சிறந்த முறையில் வழிநடத்துவதே அறநெறிப் பாடசாலைகளின் நோக்கமாக வேண்டும்

## கலாநிதி வ.கந்தசாமி



உடுவில்—

அன்பும், அறமும், நீதியும், ஒழுக்கமும் கூடிய இளைஞர்களே இன்றைய கால கட்டத்தில் எமக்குத் தேவைப்படுகிறார்கள் என யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபைத் தலைவர் கலாநிதி.வ.கந்தசாமி தெரிவித்தார்.

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய மாணவர்களால் நடத்தப்பட்ட தைப்பொங்கல் நிகழ்வில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அறநெறிப் பாடசாலை அதிபர் கா.கணேசநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கலாநிதி வ.கந்தசாமி தொடர்ந்து பேசுகையில்:-

சமுதாய நலனைச் சிந்தித்து சிறந்த நல்லொழுக்கமும், பண்பாடும், இறை நம்பிக்கையும், உயர்ந்த மனப்பாங்கும், முதியோரை, பெற்றோரை, ஆசிரியர்களை மதிக்கும் நற்பண்பும் ஏற்படுத்தும் வகையில் மாணவர்களை வழி நடத்துவதே அறநெறிப் பாடசாலைகளின் நோக்கமாக அமையவேண்டும்.

இதனைக் கருத்திற்கொண்டு இந்தப் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், ஆலய தர்மகர்த்தா சபையினர் இணைந்து நற்சேவை புரிந்து வருவது மகிழ்ச்சிக்குரிய தொன்றாகும்.

இளைஞர்கள் உயிர்களிடத்தில் அன்பு வேண்டும். தெய்வம் உண்டு என்றுதான் உணர்தல் வேண்டும் என்ற பாரதியாரின் வாக்கை நினைப்பார்களேயானால் வன் செயல்களில் ஈடுபட மாட்டார்கள் என்றார்.

இந் நிகழ்வில் அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட திருவாசகப்பண்ணிசைப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டதோடு மாணவர்களது கலை நிகழ்ச்சிகளும், கூட்டு வழிபாடும் பூஜையும் நடைபெற்றன. (101)

# மாவிலி துறைமுக பகுதியில் புதிதாக கடற்படை முகாம்!

புங்குடுதீவு—

புங்குடுதீவு மடத்துவெளி நுழைவாயில் பகுதியில் தற்போது கடற்படையால் புதிய முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இங்கு பெருமளவு கடற்படையினர் கடமையில் ஈடுபடுவதுடன் அந்தப் பகுதியினுடாக பயணிக்கும் பொது மக்களைஅச்சுறுத்தி வருகின்றனர்.

இந்தப் பகுதியில் உள்ள இந்து ஆலயத்தைச் சூழவும் முட்கம்பி வேலி அமைக்கப்பட்டதுடன், அதில் சோதனைச் சாவடி ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. வாகனங்களில் பயணம் செய்யும் அரசஊழியர்கள், ஆசிரியர்கள் மற்றும் வயது வேறுபாடின்றியும் கைக்குழந்தைகளுடன் இருப்போரும் வாகனத்தை விட்டு இறக்கப்பட்டு கடுமையாக சோதனைக்குட்படுத்தப்பட்டு வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (113)

# இரவு 10 மணிமுதல் அதிகாலை 5 மணிவரை மாவிலித்துறைமுகத்துக்குள் நுழையத்தடை!

நெடுந்தீவு—

நெடுந்தீவு மாவிலித்துறைமுக வளாகப்பகுதிக்குள் இரவு 10 மணி முதல் அதிகாலை 5.00 மணிவரைக்கும் பொதுமக்கள் எவரும் உட்பிரவேசிக்கக் கூடாதென கடற்படையினர் கடுமையான அறிவுறுத்தலொன்றைக் கடந்த புதன்கிழமை முதல் அமுல்படுத்தியுள்ளனர்.

கடற்படையினரது இந்தப் புதிய நடைமுறையால் கடற்தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். தற்போது வீசும் வாடைக்காற்றுக் காரணமாக தமது கடற்கலங்களை மாவிலித்துறைமுக வளாகப் பகுதியிலே பாதுகாப்பாக விட்டுள்ள நிலையில், அதிகாலை 3 மணிக்கே தொழிலுக்குச் செல்லும் கடற்தொழிலாளர்கள் தற்போது காலம் தாழ்த்திச் செல்ல வேண்டிய நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன் -

இதன் காரணமாக கடலுணவுகளைச் சந்தைப்படுத்த முடியாத நிலையும் ஏற்படுகிறது.

கடந்த இரு நாட்களாக துறைமுகப்பகுதியில் படகுகளைத் தனித்துவிடும் தொழிலாளர்கள் கடற்தொழிலுக்கு செல்லாதுள்ளதுடன் கடற்படையினரது இந்த நடவடிக்கையையிட்டு விசனம் தெரிவித்தனர். (113)

## மகா கணபதி ஹோமம்

பண்டத்தரிப்பு—

நாட்டு நலனை வேண்டியும், நிரந்தர சமாதானம்.வேண்டியும் வருடாவருடம் நடைபெறும் மகா கணபதி ஹோமம் - இந்த வருடம் உசன் கஜகேணிப் பிள்ளையார் கோவிலில் நாளை நடைபெறவுள்ளது

## கும்பாபிஷேகம்

பண்டத்தரிப்பு—

கோப்பாய் வடக்கு வடகோவை திருவருள்மிகு மகிழடி உக்கிர தேவஸ்தான புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை ஆலயத்தில் காலை 8.30 மணி தொடக்கம் 9.30 மணிவரை நடைபெறவுள்ளது. (12)

## கதிரை மாதா ஆலயத்தின் திருவிழா திருப்பலி

பண்டத்தரிப்பு—

புனித செபஸ்தியார் தினவிழா திருப்பலி சில்லாலை கதிரை மாதா ஆலயத்தில் இன்று காலை 7 மணிக்கு ஆலய பங்குத்தந்தை அருட்தந்தை யூட் நிக்சன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பெருவிழாவின் ஆயத்த வழிபாடுகள் 17 ஆம் திகதி மாலை 5 மணிக்கு செபமாலையுடன் ஆரம்பமாகி மூன்று நாட்கள் நடைபெற்றுவருகிறது.

## சுவாமி விவேகானந்தரின் ஜெயந்தி விழா

தாவடி—

சுவாமி விவேகானந்தரின் 144 ஆவது ஜெயந்திவிழாவை முன்னிட்டு தாவடி ஸ்ரீராம கிருஷ்ண சேவாச்சிரமத்தினரால் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு தாவடி தெற்கு ஸ்ரீகாளி அம்பாள் சனசமூக நிலையத்தில் மருத்துவ முகாம் நடத்தப்படவுள்ளது.

அன்றைய தினம் மாலை 4.30 மணிக்கு சேவாச்சிரமம் இயங்கும் தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலையின் பழைய கட்டடத்தில் பஜனை பூஜை என்பனவும் இடம்பெறவுள்ளன.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சேவாச்சிரம மண்டபத்தில் கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

## ஓட்டுமடம் செபஸ்தியார் திருவிழா திருப்பலி

யாழ்ப்பாணம்—

ஓட்டுமடம் புனித செபஸ்தியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழா திருப்பலி நிகழ்வு நேற்று மாலை 4.00 மணிக்கு செபமாலையுடன் ஆரம்பமாகி நான்கு நாட்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

எதிர்வரும் சனிக்கிழமை நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பட்டு திருப்பலி இடம்பெறும். அதனைத் தொடர்ந்து ஞாயிறு காலை 7 மணிக்கு திருநாள் திருப்பலி நடைபெற்று திருச்சொரூபப் பவனியுடன் திருவிழா நிறைவுறும்.




கொக்குவில் வளர்மதி நிறைவாழ்வக அனுசரணையுடன் முன்னெடுக்கப்பட்ட சங்கீதபூஷணம் அமரர் சி.ஆறுமுகம் பிள்ளை நம்பிக்கை நிதிய அங்குரார்ப்பண நிகழ்வில் நடனத்துறை தலைவர் கிருஷாந்தி ரவீந்திரா உரைநிகழ்த்துவதைப் படத்தில் காணலாம்.




வடமராட்சி லயன்ஸ் கழகத்ததால் அமைக்கப்பட்ட நீரிழிவுக்கான இரத்தம், சல பரிசோதனை நிலையத்தை லயன்ஸ் கழகத் தலைவர் ரி.அரியரத்தினம் திறந்துவைத்து உரைநிகழ்த்துவதைப் படத்தில் காணலாம். (12)



## சிநேகிதியே

# பெண்ணுரிமை இயக்கங்களின் செயற்பாடுகள் அனைத்தும் வெற்றி அளித்துள்ளனவா?

சென்ற வாரத் தொடர்ச்சி...

மரபுரீதியாக வந்த பழமைச் சித்தாந்த அடிமைத்தனத்தில் ஊறி, மாறிவரும் சமூகத்தைக் கூடப்புரிந்து கொள்ளாமல் , பண்பாட்டுப் போலிகளில் கட்டுண்டு போய், பெண் என்பவள் தாழ்ந்தவள் என்ற புரையோடிப் போன கருத்துகளிலிருந்து - பெண் விடுதலை பெறவேண்டும் என்பதில் இரண்டு கருத்துகளுக்கு இடமில்லை. மனிதருக்கு இருக்கும் சகல உரிமைகளும் பெண்களுக்கு மறுக்கப்படக் கூடாது என்பது உண்மையே. சிந்தனைத் தெளிவும், விடுதலை முனைப்பும், உரிமை நிலை நாட்டலுக்குமான போராட்டமாகவே பெண் விடுதலைப் போராட்டம் இருக்க வேண்டும்.

பெண் விடுதலைப் போராட்டமானது சரியான தடத்தில் முன்னெடுக்கப்படும் போது, பெண்ணியம் பற்றி விளக்கமும், விரிவாக்கமும் பன்முக ரீதியில் வளர்ச்சிப் பாதையில் சென்றிட முடிகிறது. குடும்ப நலனில் மட்டுமன்றி, சமூக அபிவிருத்தியிலும், மனித மேம்பாட்டிலும் இதனால் உருவாக்கம் பெற்ற பெண்களின் செயற்பாடுகள் முதன்மையான, முன்னணியான இடத்தைப் பெற்று வருகிறது.

எனினும் இளமையில் உத்வேகம் பெற்றிடும் பெண்கள் கூட, திருமண பந்தத்தில் இணைந்த பின்னர், அவர்களது செயற்பாடுகளில் தேக்கம் மாத்திரமன்றித் தேய்வுகளும் ஏற்படுகின்றன. குடும்பச் சுமையின் அழுத்தம் ஒரு புறம் இருப்பினும், அறிதிறனிலும், ஆளுமையிலும் ஏற்பட்டளவு மாற்றம், செயற்பாட்டளவில் எட்டப்படாமையும் இன்னொரு காரணமாகிறது. மாற்றுச் சிந்தனைகள் செயற்பாட்டளவில், ஆணாதிக்க விலங்கை உடைத்துக் கொண்டு முன்னேற முடியாத முட்டுக்கட்டைகளாக இருக்கின்றமையும் பிறிதொரு காரணமாகச் சுட்டப்படுகிறது.

பொதுவாகப் பெண்ணியச் சிந்தனை மேம்பாடு பற்றிய வளர்ச்சிக்கேற்ப, பெண்ணின் நிலையும், வாழ்க்கைத்தரமும் மேம்படாததற்கான காரணிகளில் பெண்களின்



மரபு ரீதியான சிந்தனைகளில் பூரணமான மாற்றம் ஏற்படாமையும், ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு மேல் எழுச்சி காணும் முயற்சிகளில் பல பெண்கள் முயலாமையும், ஆணாதிக்கச் சிந்தனையாளர்களின் எதிர்வினைகளையும் முக்கிய தடைக்கற்களாகக் குறிப்பிடலாம். எனவே, இவற்றைக் கவனத்தில் கொள்ளாதவிடத்து, பெண்ணிலைவாதம் வெறும் மேடைப் பேச்சாகவும், கனவுப் பொருளாகவுமே போய் விடும் அபாயமுண்டு.

எதிர்காலத்துக்கான பெண்ணியச்சிந்தனைகளை உருவாக்கும் போது, இந்தக் குறைபாடுகளை வெற்றி கொள்ளத் தக்கதான குறிக்கோள்களுடனான பெண்ணியச் செயற்பாட்டுத் திட்டமாக மாற்றி அமைக்க வேண்டும். இந்த மாற்றமானது, நடைமுறையிலுள்ள குறைபாடுகள் களையப்பட்டு, பெண் விடுதலைக்கான ஆண்களின் பங்களிப்பையும் இன்னமும் அதிகரித்து அவர்களையும் அரவணைத்துச் சொல்லுமாப் போல் திட்டவடிவங்கள் மீள் பரிசீலனை செய்யப்பட்டு, வகுக்கப்பட வேண்டும். ஆகவே இன்று பெண்ணியம் பற்றிய புதியதொரு பார்வையும் , சிந்தனையும், தேடலும், செயலூக்கமான செயற்பாடும், பன்முகப் பாங்கு கொள்ளலின் அவசியமும் அவசரமாகவும், துரிதமாகவும் எட்டப்பட வேண்டும்.

சமூகப் பிரக்ஞையுள்ள பெண்ணிலைவாதிகள் அனைவரும் தெளிவானதும், ஏற்புடையதுமானதும், மிகவும் இறுக்கமாகப் பின்பற்றக் கூடியதுமானதுமான விதிமுறைகளை வடிவமைத்து இதன் செயற்பாட்டு நடவடிக்கைகளில் சமூகத்தின் ஒத்துழைப் பையும், பங்கு பற்றலையும் ஒருமித்த சார்பு நிலை நின்று பெற்றுக் கொண்டு சுபீட்சமான பெண் விடுதலையை எட்ட வேண்டும்.



# விக்கல் கொஞ்சம் சிக்கல் தான்...!

சிலருக்கு அடிக்கடி விக்கல் ஏற்படுகிறது. மார்புக்குக் கீழே வயிற்றிலிருந்து இழுப்பது போல சில நேரம் தோன்றுகின்றது. தண்ணீர் குடித்தாலும் இறங்க நேரமாகும். வயிற்றில் ஏதேனும் பிரச்சினையாக இருக்குமா என்று நினைத்து மருத்துவரை நாடுகின்றோம்.

விக்கல் என்பது எப்போதும் கொஞ்சம் பிரச்சினையானதுதான். மார்பையும் - வயிற்றுப் பகுதியையும் இணைக்கும் பகுதியான தசைப்பகுதி விரிந்து சுருங்கும் போது விக்கல் ஏற்படுகிறது. இப்படி சுருங்கி விரிய பல காரணங்கள் உள்ளன. கல்லீரல் வீக்கம், இரைப்பை வீக்கம், நுரையீரலின் அடிப்பாகத்தில் நீர் கோர்த்துக் கொண்டால் விக்கலெடுக்கும், மன உளைச்சல் காரணமாகவும் விக்கல் ஏற்படும். ஜீரணத்தால் ஏதும் பிரச்சினை ஏற்படுவது, புரதச்சத்துள்ள உணவைக் குறைத்து உண்பதும், கொழுப்புச் சத்துள்ள உணவை அதிகமாக உண்பதும் விக்கலுக்கு காரணமாகலாம்.

இது தொடர்பாக விபரமாகப் பார்த்தால் மார்புக்கும், வயிற்றுக்கும் நடுவே உள்ள தசைகள் சுருங்கி, விரிந்து செயற்படும். அப்படி சுருங்கி விரியும் போது வருவதுதான் விக்கல். காக்கை வலிப்பு வரும்போது, கை மடங்கி விரிவது போல, விக்கலின் போது நடுவே உள்ள தசை சுருங்கி விரிகிறது. அந்த இடைப்பட்ட பகுதி தசைக்கு மேலிருக்கும் மார்புப் பகுதியில் பாதிப்பிருந்தாலும் விக்கல் ஏற்படும்.

அதற்குக் கீழே இருக்கும் வயிற்றுப் பகுதியில் உணவுக் கால்வாயில் ஏதேனும் பிரச்சினை ஏற்பட்டாலும் விக்கல் ஏற்படும். அதைவிட உணவுக் கால்வாயும், இரைப்பையும் சேருமிடத்தில் பாதிப்பிருந்தாலும் விக்கல் ஏற்படுகிறது.

காரமான உணவுப் பொருட்களை அதிகமாகச் சாப்பிடும் போது அதிர்ச்சியில் தட்டப்பட்டு தசை சுருங்கி விரிவதால் விக்கல் ஏற்படும். நம் வாழ்நாள் முழுவதும் விடாது செயல்படும் உறுப்பு டயாப்ரம், மூச்சு விட இதுதான் உதவுகிறது. அதனால் மூச்சு விடுவதை நிறுத்தும் போது விக்கல் நின்று விடும். அதனால் தான் விக்கும் போது தண்ணீர் குடிக்கின்றோம். தண்ணீரை வேகமாகக் குடிக்கும் ஒரு நிமிடம் மூச்சு நிற்கும். விக்கலும் நின்றுவிடும். அதிர்ச்சியாக எதை செய்தாலும், பேசினாலும் டக்கென்று ஒரு நிமிடம் மூச்சு விடுவது நின்று விக்கித்து நிற்போம். அதில் விக்கல் நின்று விடும். தம்பிடித்தாலோ, மூச்சை இழுத்துப் பிடித்தாலோ விக்கல் பட்டென்று நின்று விடும்.

அப்படியும் நிற்காத சமயத்தில் விக்கலை நிறுத்த ஊசி பயன்படுத்துவதுண்டு.

இப்படி விக்கல் என்பது பல பிரச்சினைகளின் எச்சரிக்கை[illegible]கின்றது. பரிசோதனைகளை மேற்கொண்டு சரியான முறையில் சிகிச்சை எடுத்துக் கொண்டால் விக்கலின் சிக்கலில் இருந்து விடுபடுவது நிச்சயம் என்கிறார்கள் மருத்துவர்கள்.

# அறுவை சிகிச்சைக்குப் பின்னரான உணவுக் கட்டுப்பாடும் உடற்பயிற்சியும்

பெண்களுக்கு ஏற்படும் மிக அதிகப்படியான இரத்தப் போக்குக்கு நிரந்தர நிவாரணம் பெறுவதற்கு அறுவைச் சிகிச்சை மேற்கொண்டபின் - மூன்று நாட்கள் வரை மருத்துவமனையில் இருந்து வீட்டிற்கு வந்தவுடன், அந்தப் பெண் என்ன மாதிரியான உணவுகளை உட்கொள்ள வேண்டும்... எப்போது உடற்பயிற்சி செய்ய ஆரம்பிக்க வேண்டும் என்பது பற்றி பார்ப்போம்.

பொதுவாகவே அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்களுக்கு மற்றவர்கள் கொடுக்கும் முதல் ஆலோசனை நல்லாச் சாப்பிடு. அப்போதுதான் உடம்பு தேறும் என்பதுதான்.

ஆனால் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்களால் மற்றவர்கள் போல் சாதாரணமாக எழுந்து அதிகம் நடமாட முடியாது. இந்த நிலையில் அதிகமாக சாப்பிட்டால் ஜீரணமாகாமல் அவதிதான் படுவார்கள்.

எனவே அறுவைச் சிகிச்சை செய்து கொண்டதும், கவனிக்க வேண்டிய முதல் விடயமே எளிதில் ஜீரணமாகும் படியான உணவுகளை மட்டுமே எடுத்துக் கொள்வதுதான். கொஞ்சமாக சாப்பிட்டாலும் சரிவிகித அளவில் சத்துள்ள உணவுகளைச் சாப்பிட வேண்டும். குறிப்பாக கீரைகள், புரதம் நிறைந்த கடலை, பயறு வகைகளைச் சாப்பிட வேண்டும்.

எண்ணெய் அதிகமாகச் சேர்த்துச் செய்த உணவுகளை ஒதுக்கி விடுங்கள். சிலர் நெய் சாப்பிட்டால் உடம்புக்கு மிகவும் நல்லது. நெய் சாப்பிட்டால் உடம்புதான் வைக்குமே தவிர அதனால் எந்தப் பிரயோஜனமும் இல்லை. குறிப்பாக நாற்பது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு உடம்பு வைப்பது மிக அதிகம்தான்.

உணவில் கட்டுப்பாட்டுடன் இருப்பது நல்லது. அதிகப்படியான நார்ச்சத்துள்ள உணவுகளை நிறைய சாப்பிடுங்கள். இதனால் மலச்சிக்கல் வராது. உடம்பு பெருக்காது.

அடுத்து இந்தக் காலகட்டத்தில் குக்கீஸ், சொக்லேட், ஐஸ்கிறீம் போன்றவற்றை அதிகமாகச் சாப்பிடுவதைத் தவிர்த்து விடுங்கள்.

அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட பெண்கள் பழங்களை அதிகமாக சாப்பிடலாம். மருத்துவரீதியாக பார்க்கும் எல்லா வகையான பழங்களையும் சாப்பிடலாம்.

பொதுவாக அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட பெண்கள் கத்தரிக்காய், கருவாடு போன்றவற்றை



சாப்பிட்டால் உடலில் குறிப்பாக அறுவை சிகிச்சை செய்த இடத்தில் அரிப்பு எடுக்கும் என்று சொல்லுவதுண்டு. இதற்கு மருத்துவ ரீதியாக எந்த நிரூபணமும் இல்லை.

என்னென்ன உடற்பயிற்சிகள் செய்யலாம் எனப் பார்த்தால் அறுவைச் சிகிச்சையின் போது போடப்பட்டிருக்கும் தையல் ஆற குறைந்தது மூன்று வாரங்களாகும். அதற்குப் பிறகு கொஞ்ச தூரம் நடந்து செல்ல ஆரம்பிக்கலாம். நான்காவது வாரத்திலிருந்து தினமும் பதினைந்து நிமிடங்களுக்கு நடந்து போக ஆரம்பிக்கலாம்.

நடந்து செல்ல வேண்டும் என்றதும் வேகமாகக் கையை வீசி மூச்சிரைக்க நடக்க வேண்டும் என்று அர்த்தமில்லை. மெதுவாக நடந்தால் போதும்.

ஆறு அல்லது எட்டு வாரங்களுக்குப் பிறகு பதினைந்து நிமிடம் நடககத் தொடங்கி ஒரு மணி நேரமாக்கிக் கொள்ளலாம். எட்டு வாரங்களுக்குப் பிறகு இந்த நடை நேரத்தை இன்னும் கூட நீங்கள் அதிகமாக்கிக் கொள்ளலாம்.

அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு புதிதாக உடற்பயிற்சி செய்ய ஆரம்பிப்பவர்கள், முதுகை வளைத்து கால்களைத் தொடுவது போன்ற கடினமான உடற்பயிற்சியெல்லாம் செய்யவே கூடாது.

அறுவைச் சிகிச்சைக்கு முன்பிருந்தே நடப்பதை தவிர மற்ற உடற்பயிற்சி செய்தவர்கள், ஜிம்முக்கு சென்றவர்களும் பழையபடி உடற்பயிற்சி செய்யலாம். ஆனால் அறுவை சிகிச்சையின் தன்மைக்கு ஏற்றபடி மருத்துவர் கூறும் உடற்பயிற்சி மட்டுமே செய்யவேண்டும்.

சரி அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட பெண்கள் இந்த உடற்பயிற்சி செய்ய செல்வது எதற்காக?

அறுவைச் சிகிச்சைக்குப் பிறகும் ஒரு சில மாதங்கள் இந்தப் பெண்கள் அதிக நேரம் படுக்கையிலேயே இருப்பதாலும், உடல் உழைப்பைப் பயன்படுத்தி செய்யும் வீட்டு வேலைகள் குறைந்து போவதாலும், அந்தப் பெண்களுக்கு அவர்கள் உண்ணும் உணவால் கலோரிகள் செலவழியாமல் உடம்பில் சேர்ந்து கொண்டே போகும். இது அவர்கள் ஆரோக்கியத்துக்குக் கெடுதலாகும்.

உடல் உழைப்புக் குறைவாகவே இருந்தால் அதனால் உடலில் பல புது நோய்கள் ஏற்படும். உடலும் குண்டாகும். அவர்களது உணவின் மூலம் சேரும் கலோரிகளை எரிக்கத்தான் இந்த உடற்பயிற்சி. இது போன்ற உடற்பயிற்சி செய்தால் தான் உடல் நோயின்றி, சுறுசுறுப்பாகவும் இயங்க முடியும்.

பல வீடுகளில் இன்னும் கூட கேட்கப்படும் ஒரு விடயம் இது... அதாவது கர்ப்பப்பை அறுவைச் சிகிச்சை அல்லது குடும்பக் கட்டுப்பாட்டு சிகிச்சை செய்து கொண்ட பெண்களுக்கு எதிர்காலத்தில் ஏதாவது உடல் ரீதியான பிரச்சினைகள் வந்தால் அதற்குக் காரணம் அந்த அறுவைச் சிகிச்சைதான் என்று கை காட்டுவார்கள்.



# குழந்தையை ஒழுக்கமானதாக வளர்க்க

குழந்தைகள் எவ்வளவு பெரிய படிப்பு படித்திருந்தாலும் சரி ... அதையெல்லாம் விட ஒரு பெற்றோரை சந்தோஷப்படுத்துவது- அவள் ஒழுக்கமானவள், நல்லவள் என்று பெயர் எடுக்கும் போது தான்!... ஒரு குழந்தையின் வாழ்க்கையில் அது பிறந்த ஆறாவது மாதத்தில் இருந்தே ஒழுக்கத்தைச் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

இரண்டு வயது ஆகும் போதே. குழந்தையைச் சாப்பிடப் பழக்குவது ஆரம்பிக்கிறது ஒரு இடத்தில் உட்கார வைத்து தனியே ஒரு தட்டில் சாப்பாடு போட்டுக் கொடுத்து விட வேண்டும்...! முதலில் தடுமாறினாலும், பிறகு அவர்களே சாப்பிட பழகிக் கொள்வார்கள். இந்தப் பழக்கத்தால் குழந்தை பின்னாடியே தட்டைத் தூக்கிக் கொண்டு ஓட வேண்டியிருக்காது.

எல்லாக் குழந்தைகளுமே அடம் பிடிப்பார்கள். ஆனால், அந்த இடத்துக்குப் பெற்றோர்கள் இடம் கொடுக்கக் கூடாது. குழந்தை ஏதாவதொரு பொருள் கேட்டு அழுது அடம்பிடிக்கும்போது, அதைக் கண்டு கொள்ளாமல் விட்டு விடுங்கள். அப்போதுதான் அழுதாலும், இங்கு ஒன்றும் நடக்காது என்று அவர்களுக்குப் புரியும். அடுத்த முறை அடம் பிடிக்க மாட்டார்கள்!

சிறுவயதிலிருந்தே அடுத்தவர்களுக்குப் பகிர்ந்து கொடுக்கும் குணத்தைக் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுக்கவேண்டும். சாப்பிடும் பொருள், விளையாட்டுப் பொருள் எப்படி எதுவாக இருந்தாலும், தான் மட்டுமே அதை அனுபவிக்காமல், பக்கத்தில் இருக்கும் மற்றவர்களுக்கும் கொடுத்துப் பழக்க வேண்டும்.

குழந்தைகளை அதிக நேரம் தொலைக்காட்சி பார்க்க அனுமதிக்காதீர்கள். அதற்குப் பதிலாக வர்ணப் படங்களுடைய கதைப் புத்தகங்களை வாங்கிக் கொடுங்கள். இதன் மூலம் படிக்கும் பழக்கத்தைக் கொண்டு வர முடியும்! ஆனால், ஒரு குழந்தையை இப்படி பழக்க வேண்டுமானால், திரைப் படங்கள் பார்ப்பதைப் பெற்றோர் நிறுத்த வேண்டும்.

எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் குழந்தைகளை காலை , மாலை இரு வேளையும் கடவுளை வணங்கப் பணிக்க வேண்டும். தனக்கு மேல் ஒரு சக்தி உள்ளது என்ற எண்ணம் வந்தாலே தவறுகள் குறையும்.

மின்சார சாதனங்கள், கூர்மையான வீட்டு உபயோகப் பொருட்கள், நெருப்பு ஆகியவற்றின் பாதுகாப்பு முறைகளைக் கற்றுக் கொடுங்கள். 'தொடாதே' என்று வெறுமனே சொன்னால் மட்டும் போதாது, ஏன் தொடக் கூடாது, தொட்டால் என்ன ஆகும் என்ற விளக்கங்களுடன் எடுத்துச் சொல்ல வேண்டும். அதைப் புரிந்து கொள்ளும் சக்தி அவர்களுக்குண்டு. இரவு 9.30 மணிக்கெல்லாம் குழந்தைகளை தூங்க வைக்க வேண்டும்.

ஒரு பத்து நிமிடம் குழந்தையுடன் படுத்துக் கதை சொல்லித் தூங்க வைத்து விட்டு, உங்கள் வேலைகளைப் பார்க்கலாம். நீங்கள் படுக்கப்போகாமல் குழந்தையை மட்டும் நீ போய்த் தூங்கு என்றால் குழந்தையும் தூங்காது.




படிப்பு விடயத்தில் குழந்தைகளை மிகவும் கட்டாயப் படுத்தக் கூடாது. எல்லாக் குழந்தைகளாலும் முதல் முறையிலேயே நூறு புள்ளிகளை எடுத்து விடமுடியாது. இரண்டு, மூன்று முறை அவர்களுக்கு சலுகை கொடுத்துப் பார்க்கலாம்.

இந்தப் பரீட்சையில் இல்லாவிட்டாலும், அடுத்த பரீட்சையாவது பார்த்துக் கொள்ளலாம் என்ற ஊக்கம் தான் அவர்களுக்குத் தேவை. பொதுவாகவே குழுந்தைகள் செய்யும் ஒவ்வொரு விடயத்தையும் நன்றாகப் பாராட்டிப் பாருங்கள்... அவர்கள் அந்தச் செயலை இன்னும் சிறப்பாகச் செய்வார்கள்.

---

# பரசிற்றமோல் நஞ்சாதல்


## (Paracetamol toxicity)




தலைவலி, காய்ச்சல், நாரிநோ, மூட்டுவலி எதுவாக இருப்பினும் பெரியவர் முதல் சிறியவர் வரை தெரிந்த வீட்டு மருத்துவம் பரசிற்றமோல். பரசிற்றமோல் என்பது பனடோல், பரசிற்றோல், கல்போல், பெவ்ரெக்ஸ், ரபிசொல், பெவ்பனைல் என்னும் வியாபார பெயர்களில் விற்பனையாகும் மருந்துகளின் பெயராகும்.

பரசிற்றமோல் ஒரு ஒப்பிய வகையைச் சாராத வலி நிவாரணி. ஆனால், இது அழற்சி நீக்கி அல்ல. **(Non opioid analgesic but not an anti-inflammatory durg).** உதாரணமாக -பரசிற்றமோல் மூலமாக வீக்கமற்ற மூட்டுவலியைக் **(Arthralgia)** குணப்படுத்தலாம். ஆனால், வீக்கமுடன் கூடிய மூட்டு வலியைக் **(Arthritis)** குணப்படுத்த முடியாது. காய்ச்சலைக் கட்டுப்படுத்துவதற்கும் பரசிற்றமோல் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது.

பரசிற்றமோல் மூளை இழையங்களில் புரஸ்ராகிளண்டின் **(Prostaglandin)** எனப்படும் நோவை ஏற்படுத்தும், இரசாயனப் பதார்த்தத்தின் தொகுப்பைத் தடுப்பதன் மூலம் வலி நிவாரணியாகத் தொழிற்படுகிறது.







சிகிச்சைக்கு என நிர்ணயிக்கப்பட்ட அளவுகளில் **(Therapeuticdose)** பயன்படுத்தும் போது, பரசிற்றமோல் மூலம் பாதுகாப்பான சிறந்த விளைவைப் பெற்றுக் கொள்ளலாம். ஆனால், நிர்ணயிக்கப்பட்ட அளவுகளிலும் அதிகமாகப் **(Over dose)** பயன்படுத்தும் போது உயிராபத்து ஏற்படும் அளவுக்குத் தீங்குவிளைவிக்கிறது. ஏனெனில், இதில் சிகிச்சைக்கென நிர்ணயிக்கப்பட்ட அளவுகளுக்கும், அதன் உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் அளவுக்கும் இடையிலான வித்தியாசம் மிகச் சிறியது.

பரசிற்றமோல் உணவுக்கால்வாயின் மூலம், அகத்துறிஞ்சப்பட்டு ஈரற் கலங்களுக்குக் கொண்டு செல்லப்படுகிறது. தொழிற் பாட்டு மூலக் கூறாக **(Active metabolite)** மாற்றப்படும் பொருட்டு, ஈரற் கலங்களில் சல்பேோனேசன் (பிரதானமாகச் சிறுவர்களின்) மற்றும் குளுக்கியூறோனி டேசன் (பிரதானமாக வளர்ந்தவர் களில்) என்னும் அனுசேப செயன் முறைக்கு உட்படுகிறது. இதன் போது உருவாகும் பதார்த்தங்களில் **NABQI (N-acetyl -p-benzoquinoneimine)** என்னும் பதார்த்தம் நச்சுத்தன்மையுடையது. இதனால் **NABQI** ஆனது சைற்றோகுறோம் **(Cytochrome)** $P_{450}$ என்னும் நொதியத் தொகுதி மூலம் குளுற்றாதி யோன் **(glutathione)** எனும் அமினோ அமிலத்துடன் சேர்க்கப்படுவதன் மூலம் நச்சு நீக்கப்படுகிறது. உடலில் குளுற்றாதியோன் மட்டுப் படுத்தப்பட்ட அளவுகளிலேயே காணப்படுகிறது.

நிர்ணயிக்கப்பட்ட அளவுகளிலும் பார்க்க அதிக அளவில் பரசிற்றமோல் உள்ளெடுக்கப்படும் போது அதிகளவு**NABQI** உருவாக்கப்படுகிறது. இது உடலில் கிடைக்கும் குளுற்றாதியோனின் அளவுகளிலும் அதிகமாகும் போது, ஈரற் கலங்களைப் பாதிக்கிறது. அத்துடன் சிறுநீரகக் கலங்களும் பாதிக்கப்படுகின்றன.

ஒரே தடவையில் **(Single overdose)** அல்லது குறுகிய காலத்தில் அதிகளவு **(Over dose with in a short period)** பரசிற்றமோல் பாவிப்பதன் மூலம் பிரதானமாக சடுதியான உயிராபத்தை ஏற்படுத்தும். ஈரல் செயலிழப்பு**(Fulminant hepatic failure)** மற்றும் சடுதியான சிறுநீரக செயலிழப்பு**(Acute renal failure)** என்பன ஏற்படலாம். நீண்டகாலமாக அதிகளவு **(Chronic overdose)** பரசிற்ற மோல் பயன்படுத்தும் போது நீண்ட கால சிறுநீரக செயலிழப்பு **(Chronic renal failure)**ஏற்படும். இவற்றை விடவும் பரசிற்றமோல் நஞ்சாதலின் மூலம்- குருதியுறைதல் பிரச்சினைகள் **(Coagulation abnormalities),** குருதியின் அமிலத்தன்மை அதிகரித்தல் **(Metabolic acidosis),** இதயத் தசை நோய்கள் **(Cardio myo pathies),** தசைகளில் பாதிப்பு, றேயிசின்றோம் **(Reyes syndrome)** என்பனவும் ஏற்படுகின்றன. ஆஸ்துமா நோயாளிகள் அடிக்கடி பரசிற்றமோல் பாவிப்பதால் நோயின் தாக்கம் அதிகரிக்கிறது.

ஏற்கனவே ஈரல் நோயுடையவர்கள், மது பாவனையாளர்கள், கர்ப்பிணிகள், வலிப்பு, கசரோகம், குருதியுறைதலைத் தடுக்கும் மருந்துகள், கருத்தரித்தல் தடை மாத்திரைகள் பயன்படுத்துவோர், போஷாக்குக் குறைபாடுடையவர்கள். உணவு உட்கொள்ளாது விரதம் இருப்பவர்கள் **(Fasting)** ஆகியோர் பரசிற்றமோல் நஞ்சாதலினால் அதிகமாகப் பாதிக்கப்படக் கூடிய வர்களாக வகைப்படுத்தப் பட்டுள்ளனர் **(Risk groups).**




பரசிற்றமோல் நஞ்சாதலுக்குச் சிறந்த மாற்று மருத்துவம் இருந்த போதிலும், பரசிற்றமோல் மூலம் ஈரல் செயலிழப்பு ஏற்படுபவர்களின் எண்ணிக்கை அதிகமாகவே காணப்படுகிறது. ஏனெனில், பரசிற்றமோல் நஞ்சாதலின் அறிகுறிகள் உடனடியாக உணரப்படமாட்டாது. ஆரம்ப அறிகுறிகளாக சத்தி, பசியின்மை என்பன ஏற்படலாம். இரண்டாம் நாளில் வலது மேல் வயிற்றுப் பகுதியில் நோ உணரப்படலாம். 3-4ஆம் நாட்களிலேயே ஆபத்தான ஈரல் செயலிழப்பதற்கான அறிகுறிகள் தென்படும்.

4-14 நாட்களில் தகுந்த சிகிச்சை மூலம் பூரண குணமடைதல் முதல் இறப்பு வரையான மாற்றங்கள் ஏற்படும். அளவுக் கதிகமான பரசிற்றமோல் உட்கொண்டபின், 8 மணித்தியாலங்களுக்குள் சிகிச்சையை ஆரம்பித்தாலே மிகவும் சிறந்தது. இது ஈரற்கலங்கள் பாதிக்கப்படுவதில் இருந்து பாதுகாக்கின்றது. எனவே, பரசிற்ற மோல் பயன்படுத்தும் போது அதன் நிர்ணயிக்கப்பட்ட அளவை அனைவரும் தெரிந்திருத்தல் வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட அளவுகள் ஒவ்வொருவரினதும் வயது, மற்றும் நிறைக்கு ஏற்ப மாறுபடுகின்றது.

(தொடரும்)

சி.குணரத்தினம்
மருத்துவபீடம்
யாழ்.பல்கலைக்கழகம்








யாழ்.குடாநாட்டில் இடம் பெற்று வரும் இராணுவக் கெடுபிடியை அடுத்து பாதுகாப்புத் தேடி வன்னிப் பிரதேசத்துக்குப் இடம் பெயர்ந்து செல்லும் மக்களைத் தங்க வைப்பதற்காக முகமாலையில் அமைக்கப்பட்டுள்ள இடம்பெயர்ந்தோர் இடைத் தங்கல் முகாமையும், இந்த மக்களுக்கான போக்குவரத்து வசதியை வழங்கும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பஸ்ஸையும், இந்த மக்களுக்கான வீடுகள் அமைத்துக் கொடுப்பதற்காக பற்றைக் காணிகளைத் துப்புரவு செய்யும் இயந்திரத்தையும் படங்களில் காணலாம்.

## மாங்குளம் மருத்துவமனையின் புதிய கட்டடம் திறந்து வைப்பு

முல்லைத்தீவு —

மாங்குளம் மருத்துவமனையின் புதிய கட்டடத் திறப்பு விழா நேற்று முன்தினம் காலை 9 மணிக்கு நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஜெயக்குலராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - பொதுச்சுடரை துணுக்காய் வலயக் கல்விப் பணிமனைப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சிவப்பிரகாசம் ஏற்றி வைத்தார்.

தமிழீழத் தேசியக் கொடியை மாங்குளம் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் நாகமைந்தன் ஏற்றிவைத்தார். பெயர்ப் பலகையை முல்லைத்தீவு மாவட்ட வைத்திய அதிகாரி தர்மேந்திரா திரைநீக்கம் செய்து வைத்தார்.

புதிய கட்டடத்தைத் தமிழீழ சுகாதார சேவைப் பொறுப்பாளர் ஓவியன் நாடாவை வெட்டி திறந்துவைத்தார்.

தொடர்ந்து தாய்சேய் நல சிகிச்சைப் பிரிவுக் கட்டடத்தை மாங்குளம் பிரதேச திலீபன் மருத்துவமனை மருத்துவர் சோபிதாவும், மருத்துவர் விடுதியை ஜேர்மன் செஞ்சிலுவைச் சங்கக்குழுத்தலைவர் கிளவுஸ்வும் திறந்துவைத்தனர்.

இந்த நிகழ்வின் கருத்துரைகளை முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிமனைப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சிவப்பிரகாசம், திலீபன் மருத்துவமனை மருத்துவர் சோபிதா, மாங்குளம் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் நாகமைந்தன், முல்லைத்தீவு மாவட்ட வைத்திய அதிகாரி தர்மேந்திரா, தமிழீழ சுகாதார சேவைப் பொறுப்பாளர் ஓவியன் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்த மருத்துவமனை கடந்த 16 ஆண்டுகளுக்கு முன்னர் இராணுவத்தினரால் முற்றாக அழிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஆசிரியர் விடுதி திறப்புவிழாவும் சான்றிதழ் வழங்கலும்

முல்லைத்தீவு —

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தில் ஆசிரியர் விடுதி திறப்பு விழாவும், கணினிப் பயிற்சி பெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நேற்று முன்தினம் நடைபெற்றது.

ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய அதிபர் பங்கயற்ச்செல்வன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கணினிப் பயிற்சி பெற்ற 17 மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. ஆசிரியர் விடுதி, தமிழீழத் தேசிய கொடிபீடம் என்பனவும் திறந்துவைக்கப்பட்டன.

## மாவீரர்களின் நினைவுக்கற்கள் துயிலுமில்லத்தில் திரைநீக்கம்

பளை —

வெவ்வேறு சம்பவங்களில் வீரச்சாவடைந்த மாவீரர்களினதும், நாட்டுப் பற்றாளரினதும் வீரவணக்கக் கூட்டமும், நினைவுக்கல் திரைநீக்கமும் நேற்று முன்தினம் காலை 10.30 மணிக்கு நடைபெற்றது.

தமிழீழ மாவீரர் பணிமனை நிர்வாக பொறுப்பாளர் இனியவன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பொதுச் சுடரைத் தமிழீழ நிதிப் பொறுப்பாளர் தமிழ்க்குமாரன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து நாட்டுப் பற்றாளர் வள்ளிப்பிள்ளை, லெப்.நகுலன், வீரவேங்கை சச்சி, கப்டன் செவ்வந்தி, வீரவேங்கை பவுணன், லெப்.பவித்திரா ஆகிய மாவீரர்களின் திருவுருவப்படங்களுக்கு ஈகை சுடர்கள் ஏற்றி வைக்கப்பட்டு, மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் - வீரவணக்க உரைகளைத் தமிழீழ மாவீரர் பணிமனைப்பொறுப்பாளர் பொன் தியாகம், தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன், பளைப் பிரதேச வர்த்தக சங்கத் தலைவர் அமிர் ஆகியோர் நிகழ்த்தினர்.

தொடர்ந்து ஐந்து மாவீரர்களினதும் திருவுருவப்படங்கள் கிளிநொச்சி மாவீரர் துயிலுமில்லத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு, நினைவுக் கற்கள் திரைநீக்கம் செய்யப்பட்டன.

## யாழ்.செஞ்சிலுவைச் சங்கப் பிரிவில் 10 பயனாளிகளுக்குப் படகுகள்

வடமராட்சி —

தாய்வான் செஞ்சிலுவைச் சங்கம் - இலங்கை செஞ்சிலுவைச் சங்க தேசிய தலைமையகம் ஊடாக யாழ்ப்பாண மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு, பருத்தித்துறை பிரிவுகளுக்கு 10 படகு தொகுதிகளை வழங்கப்படவுள்ளது.

இலங்கைச் செஞ்சிலுவைச்சங்க தேசிய தலைமையகம் 10 பயனாளிகளைத் தெரிவுசெய்து அனுப்பும்படி இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாண கிளையிடம் கேட்டுக்கொண்டது.

இதற்கமைவாக இலங்கைச் செஞ்சிலுவைச்சங்க வடமராட்சி கிழக்குப் பிரிவில் இருந்து 5 பயனாளிகளும், பருத்தித்துறைப் பிரிவில் இருந்து 5 பயனாளிகளும் தெரிவு செய்யப்படவிருக்கின்றனர். (21)

## கிராமிய அபிவிருத்தி வங்கி திறந்துவைப்பு

நெடுங்கேணி —

கிராமிய அபிவிருத்தி வங்கியின் 11 ஆவது கிளை நேற்று நெடுங்கேணியில் திறந்து வைக்கப்பட்டது.

நெடுங்கேணி கிராமிய அபிவிருத்தி வங்கி மேலாளர் கௌரி சங்கர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொதுச்சுடரை அரசியற்துறைப் பொறுப்பாளர் ஆதவன் ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக் கொடியை மணலாறு களமுனைக் கட்டளைத்தளபதிகளில் ஒருவரான வசந்தன் ஏற்றிவைத்தார்.

பெயர் பலகையை வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஞானம் திரைநீக்கம் செய்து வைத்தார்.

வங்கியின் கட்டடத்தை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன் நாடாவை வெட்டி திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் பெருமளவான மக்கள் கலந்து கொண் டனர்.

## குன்றும் குழியுமாக காணப்படும் வீதி

பூநகரி —

பூநகரி - கிராஞ்சி சந்தியிலிருந்து, வேராவில் கிராமம் வரையான சுமார் 2 கிலோமீற்றர் நீளம் கொண்ட வீதி, குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது.

அத்துடன், இந்த வீதியில் இருமருங்கிலும் பற்றைகள் வளர்ந்து காணப்படுவதுடன், மழை காலத்தில் நீர் தேங்கி நிற்பதால், வீதியில் போக்குவரத்து செய்யும் மக்களும், பாடசாலை மாணவர்களும் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இது தொடர்பாகச் சம்பந்தப்பட்டவர்களை உரியநடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (பூ)

## மருத்துவர்களின் அலட்சியத்தால் கர்ப்பிணித்தாயும் சிசுவும் மரணம்

வவுனியா —

வவுனியா பொது மருத்துவமனையில் கடந்த ஏழாம் திகதி இளம் கர்ப்பிணித்தாயும், சிசுவும் மருத்துவர்களின் அலட்சியத்தால் மரணமடைந்தனர்.

கடந்த நான்காம் திகதி மகப்பேற்றுக்காக 28 வயதுடைய ரூபகாந்தன் கலைவாணி என்ற கர்ப்பிணிப்பெண்- வவுனியா பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

பின்னர் இரண்டு நாட்களில் கர்ப்பிணிப்பெண்ணின் வயிற்றில் இருந்த சிசு இறந்துவிட்டதாக கூறிய மகப்பேற்று மருத்துவர், குழந்தையை இயல்பாக பிறக்க வைப்பதற்காக கடந்த ஏழாம் திகதி ஊசி மருந்தை ஏற்றியுள்ளார். அன்றைய தினம் அந்தக் கர்ப்பிணிப் பெண்ணும் பரிதாபமாக உயிரிழந்தார்.

இந்த மரணம் தொடர்பாக சந்தேகம் கொண்ட உறவினர்கள், பிரேத பரிசோதனைக்குட்படுத்துமாறு கேட்டுக்கொண்டனர். அதற்கமைவாக மரண விசாரணை அதிகாரி இராசலிங்கம் மரண விசாரணைகளை மேற்கொண்டு, பிரேத பரிசோதனையை மேற்கொள்ளுமாறு உத்தவிட்டார்.

பிரேத பரிசோதனையை மேற்கொண்ட மருத்துவர் மரணத்துக்கான காரணத்தைக் கூறமுடியாது எனத்தெரிவித்து விட்டார்.

இந்த நிலையில் மேலதிக பிரேத பரிசோதனைக்காக இளம் கர்ப்பிணியின் உடல் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

வவுனியா நீதிமன்றில் மரண விசாரணை அதிகாரி இராசலிங்கம் இது தொடர்பான வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து சுகாதார அமைச்சர், வடக்கு-கிழக்கு சுகாதார அமைச்சின் பணிப்பாளர், செயலாளர், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரிடம் அந்தப் பெண்ணின் உறவினர்கள் முறையிட்டுள்ளனர்.

மகப்பேற்று மருத்துவமனை அதிகாரிகளின் அலட்சியப் போக்கே இந்த மரணத்துக்குக் காரணமாகவிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

அண்மைக்காலத்தில் இந்த மருத்துவமனையில் நடைபெற்றுள்ள நான்காவது சம்பவம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

## உளவியல் சுகாதாரம் சம்பந்தமாக மாணவர்களுக்குப் பயிற்சிப்பட்டறை

வடமராட்சி கிழக்கு —

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக்கிளை பாடசாலைசார் சமூக, உளவியல் மற்றும் சுகாதாரத்திட்டம் என்பனவற்றை 12 வயதுக் குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்குக் கற்பிக்கவுள்ளனர். வடமராட்சிக் கிழக்கில் சுனாமியால் பாதிக்கப்பட்ட 5 பாடசாலைகளிலேயே இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட் டது.

இந்தத் திட்டத்தைக் கற்பிப்பதற்கான தொண்டர்கள்- நேர்காணல் மற்றும் எழுத்துப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கேவில் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலைக்கு 3 பேரும், உடுத்துறை மகாவித்தியாலயத்துக்கு 5 பேரும், மருதங்கேணி இ.த.க வித்தியாலயத்துக்கு 4 பேரும், ஆழியவளை இ.த.க. பாடசாலைக்கு 6 பேரும், வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்துக்கு 4 பேருமாக மொத்தம் 22 தொண்டர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்தத் தொண்டர்களுடன், அந்தந்தப் பாடசாலைகளில் இருந்தும் 22 ஆசிரியர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான உளவியல், சுகாதார திட்டம் சம்பந்தமான 3 நாள் பயிற்சி வகுப்புகள் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை முடிவடைந்த பின் இந்தப் பயிற்சி வகுப்புகள் நடைபெறும். இந்தப் பயிற்சி வகுப்பில் பங்கு பற்றும் மாணவர்களுக்கு மதிய உணவும் வழங்கப்படவுள்ளது. (21)

## தேடல் அறிவோர் ஆய்வரங்கு

மன்னார் —

தமிழீழ நுண்கலைப் பிரிவினரால் மல்லாவி நுண்கலைக் கல்லூரி நடாத்தும் தேடல் அறிவோர் ஆய்வரங்கு மல்லாவி நுண்கலைக் கல்லூரி கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

நுண்கலைக் கல்லூரி அதிபர் சிவசத்தியமோகன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கலைகளும் சமூக மேம்பாடும் என்ற ஆய்வரங்கை முருகேசு நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள், ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

நமது ஈழநாடு

வைர வரிகள்

கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது
தூக்கம் கடிந்து செயல்.

திருக்குறள்

## நமது நோக்கு

# வெறும் கானல் நீரே

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கமும், நோர்வே அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்மும் எதிர்வரும் 23 ஆம் திகதி இலங்கைக்கு வரவிருக்கின்ற நிலையில் -

இவர்களின் வருகையைத் தடுத்து நிறுத்துமாறு ஜாதிக ஹெல உறுமய அவசர வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

போர்நெருக்கடி தீவிரமடைந்து தமிழர் தாயகப் பகுதியில் இராணுவ நெருக்குவாரங்களும், வன்முறைகளும் அதிகரித்துள்ள சூழலில் - சொல்ஹெய்மின் வருகை குறித்து மக்களிடம் பரவலான எதிர்பார்ப்பு உருவாகியிருக்கிறது.

இந்த வருகையின் போதாவது அரசு ஒரு இணக்கப்பாட்டுக்கு வராதா என்ற ஏக்கம் மக்களிடையே இருக்கிறது. நிலைமை இப்படியிருக்கும் போது, சொல்ஹெய்ம் மற்றும் அன்ரன் பாலசிங்கம் ஆகியோரின் வருகையைத் தடுத்து நிறுத்துமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது.

மீண்டும் நாட்டில் யுத்தம் வெடித்து இரத்த ஆறு பாய்வதையே ஹெல உறுமய விரும்புகிறது என்பதைத் தெளிவாக்கியிருக்கிறது.

ஜாதிக ஹெல உறுமயவுக்கு இன்றைய போர் நெருக்கடியில் கணிசமான பங்கும், பொறுப்பும் இருக்கிறது என்பதை அண்மைக்கால சம்பவங்கள் எடுத்துக்காட்டியிருக்கின்றன.

பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகராக உள்ள ஹெல உறுமயவின் முக்கியஸ்தர் கொட்டகதெனியவினதும், பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ஷவினதும் உத்தரவின் பேரில் அனுப்பப்பட்ட விசேட அதிரடிப்படை தான் திருமலையில் 5 மாணவர்களைப் படுகொலை செய்தது.

இந்த ஐந்து மாணவர்களினது மரணங்களும் கொலை என்றும், அருகில் இருந்து துப்பாக்கியால் சுடப்பட்டே மரணங்கள் நிகழ்ந்துள்ளது என்றும் நீதிமன்ற விசாரணைகளின் பின் தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறது.

இதன் மூலம் இது ஒரு திட்டமிட்ட படுகொலை என்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டமிட்ட படுகொலையின் விளைவாகவே வன்முறைகள் திருகோணமலைக்கும் பரவும் நிலை ஏற்பட்டது.

இதேவேளை, வடக்கிலும் கூட சிங்கள பௌத்த பேரினவாத சக்திகள்தான் இனப்படுகொலைகளை நிகழ்த்தி, போர்நெருக்குவாரத்தைத் தீவிரப்படுத்துவதில் முன்னின்று செயற்படுகின்றன.

படைத்தலைமைக்குள்ளேயும், பாதுகாப்பு அமைச்சுக்குள்ளேயும் ஜாதிக ஹெல உறுமய செலுத்துகின்ற செல்வாக்கும் கூட இந்தப் போர் நெருக்கடியின் தீவிரத்துக்கு காரணம் என்றே குறிப்பிடலாம்.

மகிந்த ராஜபக்ஷவுடன் இணைந்த கூட்டணிக் கட்சிகளான ஜாதிக ஹெல உறுமயவும், ஜே.வி.பியும் தான் சுமார் இரண்டே மாதங்களில் நாட்டின் நிலைமையைத் தலைகீழாக்கிவிட்டன.

ஒற்றையாட்சி, போர்நிறுத்த மீளாய்வு, ஆசியாவுக்குள்தான் பேச்சு என்று அடுக்கடுக்கான நிபந்தனைகளை விதித்துக்கொண்டு ஆட்சிக்கு வந்த இந்தச் சக்திகள் இப்போது மெல்ல மெல்ல தமது சுயரூபத்தை வெளிக்காட்டத் தொடங்கியிருக்கின்றன.

சமாதான முயற்சிகளுக்கான வாய்ப்புக்களையெல்லாம் தடைப்படுத்தி - நாட்டையே யுத்தத்துக்குள் தள்ளிவிட்டு வேடிக்கை பார்க்கும் நோக்குடன் இவர்கள் காய்களை நகர்த்தி வருகின்றனர்.

சமாதான வழிமுறைகள் மூலம் பேச்சுக்களை நடத்தினால் தமிழ் மக்களுக்கு நியாயமான உரிமைகளைக் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும். சர்வதேச தலையீடு என்று வந்துவிட்ட பின்னர் - உரிமைகளைக் கொடுக்காமல் ஏமாற்ற முடியாது என்பதை இந்தச் சக்திகள் தெளிவாகப் புரிந்துவைத்திருக்கின்றன.

இதனால் தான் இவர்கள் போர்வெறி கொண்டு அலைகின்றனர். போர் மூலம் நாட்டில் இரத்த ஆறு ஓடி - தமிழர்களைக் கொன்றழித்துவிட்டு ஒற்றையாட்சியைப் பிரகடனப்படுத்த முனைகின்றனர்.

முன்னர் இந்திய உதவியைப் பெற்று புலிகளை அழிக்க வேண்டும் என்றும், இந்தியாவுடன் பாதுகாப்பு உடன்பாடு செய்ய வேண்டுமென்றும் கோரிய ஹெல உறுமய - இப்போது அமெரிக்க உதவியுடன் புலிகளை அழிக்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கை விவகாரத்தில் தலையிடமுடியாது என்று இந்தியா ஒதுங்கிவிட்ட பின்னர்தான், அமெரிக்கா பக்கம் சாயத் தொடங்கியுள்ளது ஹெல உறுமய.


எப்படியாவது - எந்தச் சக்தியுடனாவது கைகோர்த்து தமிழர்களை அழித்துவிடவேண்டும் என்பதே இவர்களின் இலக்கு. அந்த நோக்கத்தை திட்டமிட்ட அடிப்படையில் நன்கு நிறைவேற்றி வருகின்றன சிங்கள, பௌத்த அடிப்படைவாத சக்திகள்.

வெளிப்பார்வைக்கு இவர்கள் அரசில் அங்கம் வகிப்பது போலத் தோன்றினாலும் - அடித்தளம்வரை ஊடுருவி நின்று தமிழர்களுக்கு எதிரான விஷத்தைக் கக்கி வருகின்றனர்.

சமாதான முயற்சிகளைத் தோற்கடித்து - நாட்டையே இரத்தத்துக்குள் குளிக்கவைக்க முனையும் இத்தகைய சக்திகள் ஆதிக்கம் செலுத்தும் வரை அமைதி முயற்சிகள் என்பது வெறும் கானல் நீராகவே இருக்கும்.

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com

## நாடும் நடப்பும்



# இந்தமாதம் மட்டும் இதுவரை 25 பேர் குடாநாட்டில் காணாமற் போயுள்ளனர்!

## மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம்

இந்த மாதத்தில் மட்டும் யாழ். மாவட்டத்தில் 25 பேர் காணாமற்போயுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என யாழ்.அலுவலக இணைப்பாளர் ரோகித பிரியதர்சன தெரிவித்தார்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவில் காணாமற்போனோர் தொடர்பாக கேட்டபோதே இந்தத் தகவலை அவர் தெரிவித்தார்.

இது குறித்து அவர் கூறுகையில்-

இந்த மாதம் இதுவரை யாழ். குடாநாட்டில் 25பேர் காணாமற்போயுள்ளதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இவற்றில் 13 பேர் இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டு காணாமற்போயுள்ளதாக இவர்களது உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் யாழ்.நகரப் பகுதிகளில் இடம்பெற்ற அசம்பாவிதங்களின்போது பல மோட்டார் சைக்கிள்கள் காணாமல் போயிருப்பதாகவும் உரிமையாளர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

காணாமல் போனவர்கள் மற்றும் உடமைகள் காணாமற்போனமை தொடர்பாக உரியவர்களுடன் தொடர்புகொண்டு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பவளவிழா பிரகடன வெளியீட்டு விழா

புத்தூர்

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியின் பவளவிழாப் பிரகடன நிகழ்வு நாளை பி.ப 1.30 மணிக்குக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் அதிபர் வ.ஆறுமுகம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

1931 ஆம் ஆண்டில் கல்லூரியை நிறுவுவதற்காகக் கல்லூரியின் நிறுவுநர் அமரர் மழவராயர் கந்தையாவால் அடிக்கல் நடுகை செய்யப்பட்டமையை நினைவு கூரும் அத்திவார நினைவு நாளில் இந்தப் பிரகடன வைபவம் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் கல்லூரியின் பழைய மாணவரும் வாழ்நாள் பேராசிரியருமாகிய வி.கே.கணேசலிங்கம் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு பவள விழாப் பிரகடனத்தை வெளியிட்டு வைப்பார். சிறப்பு நிகழ்வாக இணுவில் இளந்தொண்டர் சபைக் கலைஞர்கள் வழங்கும் இசை நாடகம் இடம்பெறவுள்ளது.

ஆங்கிலேயர் காலத்தில் சைவச்சூழலில் ஆங்கில மொழிமூலக் கல்வியை வழங்கும் தேவையை நிறைவு செய்யும் வகையில் அமரர் மழவராயர் கந்தையாவால் இந்தக் கல்லூரி நிறுவப்பட்டு இலவசமாகக் கல்வி வழங்கப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## இடம்பெயர்ந்தோருக்கான மா விநியோகம்

சாவகச்சேரி

தென்மராட்சி மேற்கு பல நோக்குக் கூட்டுறவுச்சங்க கிளைகளில் இடம்பெயர்ந்தோர் நிவாரணம் பெறும் குடும்பங்களுக்கான ஜூலை, ஒகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களுக்குரிய மா தற்போது வழங்கப்பட்டு வருகிறது.

சாவகச்சேரியில் தங்கியுள்ள குடும்பங்களுக்கான நிவாரண மா சாவகச்சேரி பொலிஸ் நிலைய வீதியிலுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ந.நவரத்தினத்தின் வீட்டில் செயற்படும் கிளைப் பணிமனையில் வைத்து வழங்கப்படுவதாக எஸ்.தேவகுமார் அறிவித்துள்ளார்.

## பவளவிழாவும் மலர் வெளியீடும்

யாழ்ப்பாணம்

யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் பவளவிழாவும், கனகஜோதி மலர் வெளியீடும் எதிர்வரும் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் வி. மாணிக்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட அரச அதிபர் கணேஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

## 5 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்

அவுஸ்ரேலிய செஞ்சிலுவைச் சங்கம், இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக்கிளையுடன் இணைந்து யாழ். மாவட்டத்தில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கக் கிளைகளின் பிரிவுகளில் வருமானம் திரட்டும் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளது.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளைக்குட்பட்ட 15 பிரிவுகளிலும் பொருத்தமான தொழில் முயற்சிகளைச் செய்து வருமானம் திரட்டும் செயற்றிட்டத்துக்கு ஒவ்வொரு பிரிவுக்கும் 5 இலட்சம் ரூபா வழங்கப்படவிருக்கிறது.

ஒவ்வொரு பிரிவுகளினாலும் சமர்ப்பிக்கப்படும் தொழில் முயற்சிகள் அவுஸ்ரேலிய செஞ்சிலுவைச் சங்கத்தால் பரிசீலிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படும் தொழில் முயற்சிகளை ஆரம்பிக்க ஒவ்வொரு பிரிவுகளுக்கும் 5 லட்சம் ரூபா வீதம் வழங்கப்படவிருக்கிறது.

(21)

## திருமலையில் மாணவர்கள் ஐவரும் கொலைசெய்யப்பட்டதாகத் தீர்ப்பு

திருகோணமலை

அண்மையில் திருகோணமலை கடற்கரையில் வைத்து ஐந்து தமிழ் மாணவர்கள் கொல்லப்பட்டமையானது, அவர்களுக்கு அண்மையாக இருந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டினாலேயே என திருகோணமலை மாவட்ட நீதிவான் கமலராகவன் தனது தீர்ப்பில் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் காலை நீதிமன்றம் கூடியவேளை, நீதிவான் இது ஒரு ஆட்கொலை எனவும், இது தொடர்பாக பொலிஸார் நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிப்பதுடன், கொலைகளுடன் தொடர்புடையவர்களை இனங்கண்டு, அவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்தவேண்டும் எனவும் உத்தரவிட்டார். (10,4)

# மருத்துவ பட்டதாரிகள் 800 பேருக்கு 23 ஆம் திகதி நியமனக் கடிதங்கள்

கொழும்பு

தேசிய மருத்துவபீடம் மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் பயிற்சி பெற்ற 800 பட்டதாரிகள் உள்ளக வைத்தியர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நியமனங்களை உடனடியாக வழங்குமாறு சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா பணித்துள்ளார்.

இதற்கமைய எதிர்வரும் 23 ஆம் திகதி காலை ஒன்பது மணிக்கு இவர்களுக்கான நியமனக்கடிதங்கள் வழங்கப்படவுள்ளது.

இதன்படி வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் மற்றும் யாழ்ப்பாணம், பேராதனை, றுகுணு பல்கலைக்கழகங்களில் மருத்துவப் பட்டம் பெற்ற பட்டதாரிகளுக்கு காலை 9.30 மணிமுதல் 12 மணிவரையும் கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தில் வைத்து நியமனப்பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன.

கொழும்பு ஸ்ரீ ஜெயவர்த்தனபுர மற்றும் களனி மருத்துவ பீடங்களில் பட்டம் பெற்ற மருத்துவ பட்டதாரிகளுக்கு பிற்பகல் 1 மணிக்கும் நியமனப் பத்திரங்கள் வழங்கப்படுமெனவும், நியமனப் பத்திரங்களின் பிரதிச்சான்றிதழ் உட்பட தேவையான ஆவணங்களின் பிரதிகளைச் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

# இந்த வாரம் உங்கள் பலன் எப்படி? 20.01.2006 - 26.01.2006

| | | | |
|---|---|---|---|
| ராகு | செவ் | | |
| யுரே | 21 பி.இ. 4.40 துலா - சந்<br>24 ப. 1.39 விரு- சந்<br>26 மா. 6.21 தனு - சந் | | சனி |
| சூ. புத நெப் | | | |
| சுக் | | குரு | சந் கேது |

## மேடம்

(அஸ்வினி, பரணி, கார்த்திகை1ஆம் கால்)



மேடராசியில் பிறந்தவர்களுக்கு பல நற்பலன்கள் இவ்வாரம் நடக்கும். குடும்பத்தில் அமைதியும் மகிழ்ச்சியும் நிலவும். பொருளாதார நிலை உயரும். எடுத்த கருமங்களில் வெற்றி கிட்டும். வீட்டில் சுபநிகழ்வுகள் நடைபெறலாம். நண்பர்கள், உறவினர்களின் உதவிகள் கிட்டும். வெளிநாட்டு உதவிகளும் வந்து சேரும். குடும்பப் பெண்களின் அபிலாஷைகள் நிறைவேறும். மங்கள கருமங்களும் கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். அலுவலகங்களில் மதிப்பு மரியாதை உயரும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சுறுசுறுப்படையும். முதலீடுகளில் நல்ல இலாபம் கிடைக்கும். வியாபாரத்தைப் பெருக்க வாய்ப்புகள் கிடைக்கும். தொழிலாளர்களுக்கு செய்தொழில் விருத்தியடையும். மாணவர்களுக்கு முன்னேற்றமும் விசேட சித்திகளும் கிடைக்கும்.

## இடபம்

(கார்த்திகை 2,3,4 ரோகினி, மிருகசீரிடம் 1,2)



இடப ராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் நல்லுறவு வளரும். முன்பிருந்த கஷ்டங்கள் நீங்கும். கருமங்கள் சீராக நடக்கும். பணவருவாய் திருப்தி தரும். குடும்பப்பெண்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவர். மங்கள கருமங்களும் மனம்போல கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு அலுவலக கருமங்கள் சீராக நடக்கும். அதிகாரிகளின் ஒத்துழைப்பு கிடைக்கும். கௌரவம் மிகும். வர்த்தகர்களுக்கு கொடுக்கல் வாங்கல்களில் கூடுதல் இலாபம் கிடைக்கும். வங்கி உதவிகளும் தேவைக்கேற்ப கிடைக்கும். புதிய முதலீடுகளுக்கு நன்று. தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்பும், வருமானமும் அதிகரிக்கும். பிணக்குகள் ஏற்படாது. மாணவர் முன்னேற்றப்பாதையில் கல்வியைத் தொடருவர்.

## மிதுனம்

(மிருகசீரிடம் 3,4 திருவாதிரை, புனர்பூசம் 1,2,3)



மிதுன ராசியில் பிறந்தவர்களுக்கு குடும்ப உறவுகளில் பாதிப்புகள் ஏற்படும். எதிர்பாராத செலவுகளை சமாளிக்க வேண்டியிருக்கும். புத்திரர்களால் தொல்லைகள் அதிகமாகும். தேகசுகம் பாதிக்கப்படுவதால் வைத்தியச் செலவு அதிகரிக்கும். குடும்பப் பெண்கள் தேவையில்லாத பிரச்சினைகளைத் தருவார்கள். மங்கள கருமங்கள் இழுபறி நிலையைக் காட்டும். உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் கெடுபிடிகள் அதிகரிக்கும். அலுவலகக் கருமங்களில் சிக்கல்கள் தோன்றும். சக ஊழியரின் உதவி கிடையாது. வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தநிலைகாட்டும். கடன் தொகைகளை மீளப்பெறுவது கடினம். புதிய முதலீடுகளைத் தவிர்த்தல் நன்று. தொழிலாளர்களுக்குள் ஒற்றுமை இருக்காது. தொழில்கள் திட்டமிட்டபடி செய்ய முடியாதிருக்கும். மாணவர்களுக்கு மனோ திடமும், கூடிய முயற்சியும் தேவை.

## கடகம்

(புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்)



கடகராசியினருக்கு நன்மை, தீமைகலந்த பலன்கள் இந்தவாரம் ஏற்படும். குடும்ப உறவுகள் நன்றாக இருந்தாலும் இடையிடையே சச்சரவுகளும் தோன்றும். புத்திரர்களின் உதவி கிடையாது. பொருள்வரவு தேவைக்குப் போதுமானதாக இருக்கும். அதீத செலவுகளைக் குறைத்துக் கொள்வது நன்று. தேகசுகமும் அடிக்கடி பாதிக்கக்கூடும். மங்கள கருமங்கள் தாமதத்தின் மேல் நிறைவேறும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பொறுப்புகள் அதிகரிக்கும். எனினும் சக ஊழியரின் உதவியுடன் சமாளிக்கலாம். அதிகாரிகளுக்கேற்ப நடந்துகொள்வது நன்று. வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தநிலை காட்டும். வாடிக்கையாளர்களை வரவேற்கத்தக்க வகையில் வியாபாரத்தை மாற்றியமைத்தல் நன்று. தொழிலாளர்களுக்கு உரியநேரத்தில் தொழிலை நிறைவுசெய்ய முடியாமலிருக்கும். முயற்சிக்கேற்ப வருமானம் கிட்டும். மாணவர்களுக்கு கல்வியில் ஊக்கமும், கட்டுப்பாடும் தேவை.

## சிங்கம்

(மகம், பூரம், உத்தரம்1)



சிங்கராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பச் சிறப்பும், நல்லுறவும் விருத்தியடையும். புத்திரர்களால் நன்மைகள் ஏற்படலாம். குடும்ப வருமானம் திருப்தியாக இருக்கும். உறவினர்கள் உதவி செய்வார்கள். எடுத்த கருமங்கள் வெற்றியளிக்கும். பெண்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவர். மங்கள கருமங்கள் விரைவில் கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு அரசாங்க உதவிகள் கிடைக்கும். அதிகாரிகளும் ஒத்துழைப்பு வழங்குவர். வசதியான இடமாற்றங்கள் சீராக இருக்கும். முதலீடுகள் விற்பனையாகி இலாபத்தைக் கொடுக்கும். வாடிக்கையாளர்களின் வரவு அதிகரிக்கும். தொழிலாளர்களுக்கு உற்சாகமும், ஆர்வமும் அதிகரிக்கும். புதிய தொழில்கள் கிட்டும். மாணவர்கள் சித்தி பெறுவார்கள்.

## கன்னி

(உத்தரம் 2,3,4 அத்தம், சித்திரை 1,2)



கன்னிராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் நல்லுறவு விருத்தியடையும். வருமானம் அதிகரிக்கும். புத்திரர்களாலும், உறவினர்களாலும் உதவிகள் உண்டு. வெளிநாட்டுத் தொடர்புகள், பொருள் வரவுகள் கிடைக்கலாம். எடுத்த கருமங்கள் தங்குதடையின்றி வெற்றிதரும். மங்கள கருமங்கள் மனம்போல் கைகூடி புதுவாழ்வு ஆரம்பிக்கும். உத்தியோகத்தர்களுக்கு அலுவலகங்களில் வரவேற்பு பிரமாதமாக இருக்கும். வேலை மாற்றங்கள் விரும்பியவாறு கிடைக்கும். சிலருக்கு பதவி உயர்வு கிட்ட இடமுண்டு. வர்த்தகர்களுக்கு வியாபாரம் மிகச் சிறப்பாக நடக்கும். எதிர்பாராத இலாபங்கள் கிட்டும். வங்கி உதவிகளும் உரிய நேரத்தில் வந்து சேரும். தொழிலாளர்களுக்கு புதிய தொழில்கள் கிடைக்கும். நல்ல வருமானம் பெறுவர். மாணவர்கள் முன்னேற்றம் பெறுவர். உயர்கல்வி வாய்ப்புகள் உண்டு.

## துலாம்

(சித்திரை 3,4 சுவாதி, விசாகம் 1,2,3)



துலாராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் நிம்மதியின்மையும், சுகக் குறைவும் அடிக்கடி ஏற்படும். வரவுக்கு மிஞ்சிய செலவுகள் இருக்கும். தொடங்கும் கருமங்கள் நிறைவேறாது இழுபறியில் இருக்கும். புத்திரர்களால் தொல்லை அதிகரிக்கும். எதிர்பாராத செலவுகளை தவிர்க்க முடியாமலிருக்கும். தெய்வ வழிபாடுகளால் சாந்தி ஏற்படலாம். மங்கள கருமங்கள் கால வரையறையின்றித் தள்ளிப்போகும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். சக உதவிகள் கிடையாது. அதிகாரிகளின் கடும்போக்கால் மனவேதனை ஏற்படும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தமாக இருக்கும். நிதிநிலை மோசமாக இருக்கும். பழைய கடன்களையும் மீளப்பெறுவது கஷ்டம். தொழிலாளர்கள் பல சிக்கல்களைச் சமாளிக்க வேண்டியிருக்கும். மாணவர்களுக்கு கல்வியில் நாட்டம் குறையும்.

## விருச்சிகம்

(விசாகம் 4, அனுஷம், கேட்டை)



விருச்சிக ராசியினருக்கு குடும்பத்தில் நல்லுறவு வளரும். வருவாய் அதிகரிக்கும். உறவினர்களின் உதவி கிடைக்கும். வெளிநாட்டுத்தொடர்பால், பொருள் வரவு கருமங்கள் தங்குதடையின்றி நிறைவேறும். மங்கள கருமங்கள் மனம்போல நிறைவு பெறும். உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகள் ஆதரவு கொடுப்பர். சிலருக்கு பதவி உயர்வு, ஊதிய உயர்ச்சி என்பன கிடைக்கும். பொது மக்கள் மத்தியில் மதிப்பு உயரும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்படையும். முதலீடுகளில் நல்ல இலாபம் கிடைக்கும். தொழிலாளர்களுக்கு தொழில் முன்னேற்றமடையும். வருவாய் சிறக்கும். மாணவர்கள் ஊக்கத்துடன் செயற்படுவர். பரீட்சைகளில் சித்தி உண்டு.

## தனுசு

(மூலம், பூராடம், உத்தராடம், 1)



தனுசு இராசியினருக்கு குடும்பநிலை நன்றாக இருந்தாலும், இடையிடையே சச்சரவுகளும் ஏற்படும். வருவாய் தேவைக்குப் போதுமானதாக இருக்கும். புத்திரர்களிடம் நன்மையை எதிர்பார்க்க முடியாது. தொடங்கும் கருமங்கள் தாமதத்தின்மேல் நிறைவேறும். விவாகாதி சுபகருமங்களும் தாமதத்தின் பின் கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப் பளு அதிகமாயினும் சக உதவியுடன் சமாளிக்கலாம். அதிகாரிகளின் போக்குக்கேற்ப நடந்து கொள்வது நன்று. வர்த்தகர்களுக்கு வியாபாரம் மத்திமமாகும். வங்கி உதவிகள் வெகு பிரயாசையின்பின் கிடைக்கும். வாடிக்கையாளர்களின் வரவு குறையும். தொழிலாளர்கள் பிரயாசைக்கேற்ப இலாபம் பெறுவர். மாணவர்களுக்கும் ஊக்கம் தேவை.

## மகரம்

(உத்தராடம் 2,3,4 திருவோணம், அவிட்டம் 1,2)



மகர ராசியினருக்கு குடும்ப உறவில் அமைதி ஏற்படும். புத்திரர்களால் உதவி உண்டு. தம்பதிகளிடையே அந்நியோன்யம் வலுக்கும். நண்பர்கள் உறவினர்கள் உதவி கிடைக்கும். வருவாய் திருப்தியாக இருக்கும். தேக சுகம் பாதிப்படையாது. மங்கள கருமங்கள் விரைவில் நிறைவேறும். உத்தியோகத்தர்களுக்கு வருவாய், பிரயாண வசதிகள் நன்கு அமையும். அதிகாரிகள் ஒத்துழைப்பர். வர்த்தகர்களுக்கு வியாபாரம் நன்கு நடக்கும். முதலீடுகளால் இலாபம் கிட்டும். வங்கி உதவிகளும் உண்டு. தொழிலாளர்களுக்கு புதிய தொழில்வாய்ப்பு கிடைக்கும். நல்ல வருமானம் பெறுவர். மாணவர்கள் முன்னேற்றம் அடைவர். உயர்கல்வி வாய்ப்புக்கள் கிட்டும்.

## கும்பம்

(அவிட்டம் 3,4 சதயம், பூரட்டாதி 1,2,3)

கும்ப ராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் இடையிடையே சச்சரவுகள் ஏற்படலாம். எண்ணிய கருமங்கள் தடைப்படும். எதிர்பாராத வகையில் செலவுகள் காட்டும். பொதுவாக



நிம்மதி என்பது குறைவாகவே இருக்கும். தெய்வ வழிபாடு சற்று ஆறுதலைக் கொடுக்கும். மங்கள கருமங்கள் தாமதப்பட்டுக் கொண்டேபோகும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப் பொறுப்புக்கள் கூடும். கடமைகளில் சிக்கல்கள் தோன்றும். வர்த்தகர்களுக்கு வியாபாரத்தில் போட்டி, பொறாமை தலைதூக்கும். புதிய முதலீடுகளை தவிர்த்தல் நன்று. கொடுக்கல் வாங்கல்களில் அவதானம் தேவை. தொழிலாளர்களுக்கு தொழில்வாய்ப்புக்கள் குறையும். ஒப்பந்தங்களில் குளறுபடிகள் ஏற்படும். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் குறைந்து காணப்படுவர்.

## மீனம்

(பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி)



மீன ராசியினருக்கு குடும்ப உறவுகள் நன்றாக இருப்பினும் இடையிடையே கருத்து வேற்றுமை தோன்றும். பெரியோர்களின் உதவி கிடைக்கும். கடின உழைப்பின் மேல் வருமானம் கிடைக்கும் தேக சுகத்தை பேணிக்கொள்வது நன்று. மங்கள கருமங்கள் தாமதத்தின் மேல் நடைபெற இடமுண்டு. உத்தியோகத்தர்களுக்கு வேலைப் பளு அதிகரிக்கும். எனினும் மேலதிகாரிகள் பொறுப்புடன் நடந்துகொள்வர். வர்த்தகர்களுக்கு வியாபாரம் குறைவாகவே இருக்கும். இலாபங்கள் மட்டுப்படுத்தப்படும். புதிய முதலீடுகள் நன்றல்ல. தொழிலாளர்கள் ஒப்பந்த வேலைகளை செய்வதில் கடின முயற்சி எடுக்க வேண்டும். வருமானம் சுமாராக இருக்கும். மாணவர்கள் கூடியகவனம் செலுத்தினால் மட்டுமே முன்னேற முடியும்.

# அறநெறிப் பாடசாலைகளில் அறநெறிப் போதனை

மனித வாழ்க்கையில் கல்வி என்பது 'கருவறை தொடக்கம் கல்லறைவரை' வியாபித்துச் செல்லும் ஓர்செயற்பாடாகும். இவ்வாறு பரந்து செல்லும் கல்வியினுடைய வடிவங்கள் பல வகைப்பட்டவை. மெய்ஞ்ஞானகல்வி, அறிவியல் கல்வி, பொருளியல்கல்வி, வியாபாரக்கல்வி, சமூகம் சார்ந்த கல்வியென கல்வியின் வடிவங்கள் பல. இக்கல்வி முறைகள் அனைத்தும்



பொருளாதாரத்தை நோக்கமாகக் கொண்டே கற்றல் - கற்பித்தல் இடம் பெறுகின்றது. ஆனால், இவை எல்லாவற்றையும் கடந்து மனிதனை வாழ்வாங்கு வாழ வழிகாட்டும் கல்வியே சமயக் கல்வியாகும்.

பண்டைய கால கல்வி முறையில் ஒழுக்க விழுமியம் சார்ந்த கல்விக்கே முன்னுரிமையளிக்கப்பட்டது. ஒழுக்க விழுமியங்கள், அறக் கருத்துக்கள் - இலக்கியங்கள், நற்கதைகளூடாக கற்பிக்கப்பட்டு வந்தன. ஆசிரியர்களும், மாணவர்களும் சமயவாதிகளாக இருந்து அறவிழுமியங்களை கற்பித்தும் கற்றும் வந்தனர்.

அந்தக் காலத்தில் கல்வியை வழங்கும் பொறுப்பை சமய நிறுவனங்கள் ஏற்றிருந்தன. இந்தியா, ஐரோப்பிய நாடுகள், மத்திய கிழக்கு நாடுகள் (இஸ்லாமிய நாடுகள்) எல்லாவற்றிலும் இவ்வாறானதொரு முறையே காணப்பட்டது. சமய நிறுவனங்கள் ஊடாக சமயக் கல்வி கற்பிக்கப்பட்டதுடன், ஒழுக்க விழுமியங்கள் அந்தக் காலத்தில் வலியுறுத்தப்பட்டது. இந்து சமயத்தை எடுத்துக் கொண்டால் முத்தி பெறுதலை இலக்காக கொண்ட தவமுறைகள் கல்வியின் இலக்காக கொள்ளப்பட்டது.

ஆதீனங்களிலும், குருகுலங்களிலும் கல்வி கற்பிக்கப்பட்டது. அதேபோல பௌத்த கல்வி பிரிவேனாக்களிலும், கத்தோலிக்க சமயம் சார்ந்த கல்வி திருச்சபைகளிலும் கற்பிக்கப்பட்டது. இவ்வாறு கற்பிக்கப்பட்டு வந்த கல்வி முறைகளில் ஒழுக்க கருத்துக்களுக்கும், அறக்கருத்துக்களுக்குமே முக்கியத்துவமளிக்கப்பட்டது.

இவற்றையெல்லாம் தாண்டி கல்விமுறைகள் காலமாற்றத்திற்கேற்ப நவீன முறையில் மாற்றமடையத் தொடங்கின. அவ்வாறு இடம் பெற்ற பிரதான மாற்றங்களில் ஒன்று தான் கல்வி சமய நிறுவனங்களின் பிடியிலிருந்து படிப்படியாக விலகிக் கொண்டமையேயாகும். இதனால் சமயக் கல்வி வலுக்குன்றத் தொடங்கியது. விழுமியம், அறம், ஒழுக்கம் போன்ற பண்புகள் சமூகத்தில் அருகத் தொடங்கின. உலகின் பெரும்பாலான நாடுகளில் பாடசாலைகளில் சமயக் கல்வி தடை செய்யப்பட்டு அதன் முக்கியத்துவம் குறைக்கப்பட்டது.

நவீன கல்வி போக்குகளில் சமயக் கல்வியையும் அதன் போதனைகளையும் கடைப்பிடிப்பவர்களை மூட நம்பிக்கை கொண்டவர்களாக சிலர் கருதினர். இவ்வாறானதொரு சந்தர்ப்பத்தை பயன்படுத்தி மனிதன் தொழிற்கல்வியின் பால் கூடிய நாட்டம் செலுத்தி இயந்திர வாழ்க்கைக்கு அடிமையாகத் தொடங்கினான். சமூகத்தில் மனிதப் பண்புகள் மறையத் தொடங்கியதுடன் வன்முறைகள், போட்டி பொறாமைகள் சமூகத்தில் தலைவிரித்தாடத் தொடங்கின.

இவ்வாறானதொரு சூழ்நிலையிலே கல்வி பற்றிய திட்டமிடல்களிலே பாரிய மாற்றம் கொண்டு வரவேண்டிய தேவையேற்பட்டது. பாடசாலைகளிலே அறக்கருத்துக்களும், ஒழுக்க விழுமியங்களும் கற்பிக்கப்பட வேண்டும். நெறிமுறைப்படுத்தப்பட்ட ஒழுங்குமுறைகள் ஊடாக அறக்கருத்துக்கள் மாணவர்களை சென்றடைய வேண்டும் என உலகில் வாழும் அனைவரும் ஏற்றுக் கொண்டனர். இத்தகையதொரு அம்சம் எமது நாட்டுக் கல்வி முறையிலும் வலியுறுத்தப்பட்டது. இவ்வாறு நிலைமை எதுவாக இருப்பினும் எமது பாடசாலைகள் இன்றும் கூட அறக்கல்விக்கு முக்கியத்துவமளிப்பதில்லை.

பாடசாலைகளில் தரம்1 தொடக்கம் தரம் 11 வரையிலான வகுப்புக்களில் சைவநெறி எனும் பாடநூலினூடாக சமயக்கல்வி போதிக்கப்படுகின்றது. இவ்வாறு போதிக்கப்படும் சமயக் கல்வி ஒரு மாணவனுக்கு தனது சமயம் பற்றிய முழுமையான விளக்கத்தை கொடுக்குமா என்றால் இல்லை என்று தான் கூற வேண்டும். ஏனெனில் அதற்கான காரணங்கள் பல காணப்படுகின்றன.

- பாடசாலையில் சமய பாடத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ளாமையும் பொருத்தமில்லாக ஆசிரியர்கள் சமய பாடத்தை கற்பிக்கின்றமையும் உதாரணமாக கணித விஞ்ஞான ஆசிரியர்கள் சமய பாடத்தை கற்பித்தல்.
- பாடசாலைகளில் சமய பாடத்தை போதிக்கும் பயிற்சி பெற்ற ஆசிரியர்களின்மை.
- சமய பாட ஆசிரியர் தன்னை ஓர் சமயவாதியாக காட்டிக் கொள்ளாமல் சமய பாடத்தைக் கற்பித்தல்.
- சமய பாட ஆசிரியர்களுக்கு தமது சமயம் பற்றிய ஆழமான அறிவு இன்மை.
- சில பாடசாலைகளில் இந்து சமய ஆசிரியர்களின்மை.
- சமய பாடத்துக்கான பாடவேளைகளில் மட்டும் சமயக் கல்வியை கற்பிக்க முடியாமை. அதாவது வரையறுக்கப்பட்ட பாடவேளைகள்.
- சில பாடசாலைகளில் சமய விழாக்கள் கொண்டாடப்படாமை. உதாரணம் குரு பூசைத் தினம்.

இவ்வாறான மாணவனொருவனுக்கு பாடசாலையினால் வழங்கப்படும் சமய அறிவு தவணை பரீட்சை நோக்கில் தயார்படுத்துமே தவிர நடைமுறையில் அது யதார்த்தமன்று. எனவே, ஒரு மாணவன் சமூகத்தில் சிறந்தவனாகவும், சமய பண்புகள், மனிதாபிமானம் நிறைந்தவனாகவும், அற விழுமியங்களை பேணி நடப்பவனாகவும் விளங்க வேண்டுமேயானால் அவன் நாடிச் செல்ல வேண்டிய ஒரே இடம் அறநெறிப்பாடசாலைகளே ஆகும். இன்று சாதாரணமாக சமூகத்தில் காணப்படும் பாடசாலைகளூடாக நிறைவேற்றமுடியாத பலவற்றை அறநெறிப் பாடசாலைகள் நிறைவேற்றிவருகின்றன. எனவே, நிகழ்கால பெற்றோர்களே உங்கள் எதிர்காலம் பிள்ளைகள், சமூகத்தில் மனிதப் பண்புகள் மிக்கவராக விளங்க வேண்டுமேயானால் அவர்களை அறநெறிப் பாடசாலைக்கு தவறாது அனுப்புங்கள்.

**கா.நிமலன் - வரணி**

# அஞ்சலி



தமிழ்த் தேசியப் பற்றாளரும், நிதர்சனம் நிறுவனம் தயாரித்த விவரணங்கள்
பலவற்றின் மூலகர்த்தாவும், நிதர்சனம் நிறுவனம் தயாரித்த குறும்படங்கள்,
முழுநீளப் படங்களின் ஆரம்பகர்த்தாவும், ஒளிவீச்சு சஞ்சிகையின்
தொடக்குனர்களில் ஒருவரும், தமிழீழத்தேசியத் தொலைக்காட்சியை
ஆரம்பிப்பதில் முன்னின்றவர்களில் ஒருவருமான,

## வை.சச்சிதானந்தசிவம்

(ஞானரதன்)

(தமிழீழத்தின் தலைசிறந்த படைப்பாளி)

அவர்களுக்கு எமது அஞ்சலி

பொறுப்பாளர்கள், போராளிகள், பணியாளர்கள்
நிதர்சனம் நிறுவனமும்,
தமிழீழத் தேசியத்தொலைக்காட்சியும்

(சி/5026)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# ஹெலியில் வந்த படையினர் சுழிபுரம் பகுதியில் தேடுதல்!

சுழிபுரம் —

சுழிபுரம் - பாண்டவெட்டைக் கிராமத்தில் ஹெலி மூலம் இறக்கப்பட்ட கடற்படையினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டதால் பொதுமக்கள் மத்தியில் பெரும் அச்சம் ஏற்பட்டது.

நேற்றுமுன்தினம் நண்பகல் 1 மணியளவில் திடீரென பலாலி இராணுவ முகாமிலிருந்து ஹெலி மூலம் கொண்டு வந்து இறக்கப்பட்ட கடற்படையினரும் திருவடிநிலைப் பகுதியிலிருந்து வந்த கடற்படையினரும் இணைந்து பாண்டவெட்டையில் பாரிய தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்

வீடுகளுக்குள் நுழைந்து தேடுதல் நடத்திய அதேவேளை அந்தக் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் பலரையும் கடுமையாக விசாரணை செய்தனர். அதன்போது பலர் தாக்கப்பட்டதாகவும் தெரியவருகின்றது. எனினும் இந்தத் தேடுதலின்போது கடற்படையினரால் சந்தேகத்திற்கிடமான பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை எனவும் தெரிய வருகின்றது.

தேடுதல் நடத்திவிட்டுத் திரும்பும் போது கடற்படையினர் பொதுமக்களை கடுமையாக எச்சரித்து விட்டுச் சென்றனர். இதனால் அச்சம் அடைந்த மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லத் தொடங்கியுள்ளனர்.

யாழ். குடாநாட்டில் படையினர் தொடர்ச்சியான சுற்றிவளைப்பு, தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற போதிலும் ஹெலிகொப்டர் மூலம் கடற்படையினரைக் கொண்டு வந்து தேடுதல் நடத்தியது இதுவே முதல் தடவையாகும். கடற்படையினர் தேடுதல் நடத்திய கிராமம் உயர் பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதுகாட்டுப்புலம்கிராமத்துக்கு அருகில் உள்ளது குறிப்பிடத்தக்கது.




திருமலையில் தாக்குதல் இடம்பெற்ற இடத்தில் குவிக்கப்பட்டுள்ள படையினர்



வைத்தியசாலையில் கிடக்கும் உயிரிழந்த பொலிஸாரின் சடலம்



# இயக்குனர் ஞானரதன் கொழும்பில் காலமானார்



யாழ்ப்பாணம் —

பிரபல திரைப்பட இயக்குனரும் சிறுகதை, நாவல் எழுத்தாளருமான வை. சச்சிதானந்தசிவம் (ஞானரதன்) தனது 65 ஆவது வயதில் சுகவீனம் காரணமாக கொழும்பில் நேற்றுமுன்தினம் காலமானார்.

அளவெட்டியைச் சொந்த இடமாகக் கொண்ட ஞானரதன் சுகவீனமுற்ற நிலையில் கடந்த இரண்டு மாத காலமாக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தபோதும், சிகிச்சை பலனளிக்காத நிலையில் காலமானார்.

சிறுகதை, நாவல் எழுத்தாளரான இவர் - பல ஈழத்து திரைப்படங்களை இயக்கியுள்ளார். இவர் ஓவியர் ரமணியின் சகோதரன் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவரது இறுதிக் கிரியைகள் நாளை கொழும்பில் நடைபெறவுள்ளது.

## எஸ்.பியின் எம்.பி. பதவி இரத்தானதாக அறிவிப்பு

கொழும்பு

சிறையிலுள்ள எஸ்.பி.திஸநாயக்கவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி இரத்துச்செய்யப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான எஸ்.பி.திஸநாயக்க நாடாளுமன்றத்தின் அனுமதியைப் பெறாது தொடர்ச்சியாக மூன்று மாதங்கள் நாடாளுமன்றக் கூட்டங்களில் கலந்துகொள்ளாமையால் அரசியலமைப்புச் சட்டத்தின் 66 (ஈ) பிரிவின் கீழ் அவரின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி இரத்தாவதாக தேர்தல் ஆணையாளருக்கு நாடாளுமன்றப் பொதுச் செயலாளர் பிரியாணி விஜேசேகர எழுத்துமூலம் அறிவித்துள்ளார்.

நாடாளுமன்றச் செயலாளரின் கடிதம் நேரடியாகவே தேர்தல் திணைக்களத்தில் கையளிக்கப்பட்டதாகத் தெரிய வருகின்றது. *(முன்னர் வந்த செய்தி 3 ஆம் பக்கத்தில்)* (01)

## சிறிய...

இப்போது குறைவுதான். யுத்த களத்தில் முன்னர் வருடத்துக்கு 2000 அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர்.

அமைதிப் பேச்சுக்களுக்கான முன் நிபந்தனையாக யுத்த நிறுத்த ஒப்பந்தம் உள்ளது. எப்போது பேச்சுக்கள் நடைபெறும் என்பதை உறுதியாகச் சொல்ல முடியாது.

வன்முறைகள் அதிகரித்துச்செல்வது முக்கிய பிரச்சினையாக உள்ளது. படையினரும் கொல்லப்பட்டுள்ளனர். தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோரும் கொல்லப்பட்டுள்ளனர்.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மதித்துச் செயற்படுவது என்பதுதான் இப்போதைய முக்கியமான ஒன்றாகும் என்று எரிக் சொல்ஹெய்ம் மேலும் தெரிவித்தார். (01)

## மட்டக்களப்பில்...

தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தச் சம்பவத்தில் 3 பொலிஸார் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும் 13 பொலிஸாரும் கப்டன் ஒருவர் உட்பட 7 படையினரும் படுகாயமடைந்தனர்.

இதையடுத்து அந்தப் பகுதியில் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் பாடசாலை மாணவர் ஒருவர் உயிரிழந்ததுடன், 3 பொதுமக்கள் காயமடைந்தனர். இவர்கள் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

பின்னர் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் உள்ள 4 படையினர் விமானம் மூலம் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

மேலும் இந்தத் தாக்குதல் சம்பவத்தையடுத்து அப்பகுதி சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

## மட்டக்களப்பில் 7..

6 பொதுமக்கள் படுகாயமடைந்தனர்.

நேற்றுக்காலை 8.15 மணியளவில் இடம்பெற்ற இந்தத் தாக்குதலில் காயமுற்றோர் மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் காயமுற்றோர் விபரம் வருமாறு -

பெண் பொலிஸ் கொன்ஸ்டபிள் எஸ்.பி.அனுரா (வயது 34) மற்றும் பொதுமக்களான சூசைப்பிள்ளை தவராசா (வயது 54), சீனித்தம்பி பேதுறுப்பிள்ளை (வயது 52), நாகையா சதீஸ்குமார் (வயது 31), தட்சணாமூர்த்தி ஜெயச்சந்திரிகா (வயது 30), பொன்னையா கணேசபிள்ளை (வயது 35), பக்கீர் முகைதீன் மீராசாகிபு (வயது 50), முகைதீன் கனீபாஅப்ராஸ் (வயது 35).

## துப்பாக்கிச் சூட்டில் சிப்பாய் காயம்!

திருகோணமலை —

திருகோணமலை - அனுராதபுரச் சந்தியில் நேற்று முன்தினம் இரவு 9.55 மணியளவில் விமானப் படையினர் பயணம் செய்த வாகனம் ஒன்றின் மீது இனம் தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் விமானப் படைச் சிப்பாய் ஒருவர் காயமடைந் தார்.

## திருமலையில்...

மற்றும் தாக்குதல்களில் காயமடைந்த 12 பொதுமக்கள் திருமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதையடுத்து, திருகோணமலை நகரப் பகுதியில் பதற்றநிலை ஏற்பட்டிருக்கிறது.

இந்தச்சம்பவத்தில் படுகாயமடைந்த பொதுமக்களின் விபரம் வருமாறு -

பெனடிக்ட் (வயது 38), வினோத்ராஜா(வயது 28), கமலதாஸ் (வயது 48), பாக்கியராஜ் (வயது 24), நவாஸ் (வயது 42), அருள்ராஜ் (வயது 30), ரவிச்சந்திரன்(வயது 37), ஜெயச்சந்திரன்(வயது 34), சந்திரசேகர (வயது 38) மற்றும் மசூர் (வயது 73) இந்தக் குண்டுத் தாக்குதலில் அப்பகுதியில் உள்ள கடையொன்றும் பாரிய சேதமடைந்தது. தாக்குதலையடுத்து பல பொதுமக்களை விசாரணை என்ற பெயரில் கடற்படையினர் தடுத்துவைத்துள்ளதாகவும் திருமலைச் செய்திகள் தெரிவித்தன.

## வாக்கெடுப்பு...

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்ட வழக்கின் விசாரணையும் முறையாக நடத்தப்படவில்லை என அவர் தெரிவித்தார்.

அதேவேளை கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் பேசிய அமைச்சரவைப் பேச்சாளர் நிமல் சிறிபால டி சில்வா:-

நாடாளுமன்றத்தை இயக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அனுமதி கொடுக்க வேண்டும். நாடாளு

## சடலமாக...

உடனடியாக அரசு நிறுத்த வேண்டும் எனக் கோரியும், தமிழ்தேசியக் கூட்டமைப்பினர் குழப்பத்தில் ஈடுபட்டனர். அமர்வுகளை நடத்தவிடாது திட்டமிட்டபடி குறித்த நேரத்துக்கு சபாநாயகர் சபைக்குள் நுழைந்தவேளை கூட்டமைப்பினர் கூச்சல் குழப்பத்துடன் அவரை நுழையவிடாது தடுத்தனர். அவர்களை மீறி ஆசனத்தில் அமர்ந்த சபாநாயகர் அவசரகாலச் சட்டம் மீதான விவாதத்தை நடத்தினார். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவிக்காததையடுத்து அவசர காலச் சட்டத்தை அடுத்த மாதம் 19 ஆம் திகதி வரை நீடிப்பதாக அறிவித்ததுடன் அடுத்த நாடாளுமன்ற அமர்வு மாசி மாதம் முதலாம் திகதி நடைபெறுமென அறிவித்துவிட்டு சபையை விட்டு வெளியேறினார்.

இதன் பின்னர் வட- கிழக்கில் நடைபெற்று வரும் படுகொலைகள், ஆட்கடத்தல்கள், மக்கள் மீதான சித்திரவதைகளை சித்தரிக்கும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர் மா.க ஈழவேந்தனை வெள்ளைச் சீலையால் மூடி சபையின் நடுவே வைத்து கதறியழுது ஒப்பாரி வைத்தனர்.

இவர்களுடன் மலையக மக்கள் முன்னணி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மேலக மக்கள் முன்னணி, ஆகிய கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். (01)

35).

## பேச்சு...

தள்ளப்பட்டிருக்கும் போர்நிறுத்த உடன்படிக்கை முறிவடையாது விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என இந்தக் கூட்டத்தில் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை வற்புறுத்தினார்.

எனினும் எந்த நாட்டில் பேச்சுக்களை ஆரம்பிப்பது என்பது தொடர்பான தீர்மானங்களை ஜனாதிபதியே பொறுப்பேற்கவேண்டுமென கட்சித் தலைவர்கள் கேட்டுகொண்டதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இன்றைய சந்திப்புத் தொடர்பான அறிக்கையொன்றை ஜனாதிபதி செயலகம் வெளியிடவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சந்திப்பில் ஆளும் கட்சி உறுப்பினர்கள், ஐ.தே.கட்சி உறுப்பினர்கள், இ.தொ.கா., சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி என்பனவற்றுடன் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு தவிர்ந்த ஏனைய அரசியல் கட்சிகள் கலந்துகொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் முக்கிய பேச்சுக்களை நடத்தி வருவதால் அவர்களை இந்தக் கூட்டத்திற்கு அழைக்கவில்லையென அரசாங்கத் தரப்பு பேச்சாளர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

அனுமதி கொடுக்க வேண்டும். நாடாளுமன்றச் செயற்பாடுகளின் ஊடாக தங்களது கோரிக்கைகளை அவர்கள் தெரியப்படுத்த வேண்டும். இராணுவத்தினர் மீதான தாக்குதல்களுக்கு விடுதலைப் புலிகள் பொறுப்பல்ல என கூறிவிட்டனர். அதனால்தான் பொது மக்கள் வாழ்விடங்களில் நாங்கள் தேடுதல்கள் நடத்துகின்றோம் எனத் தெரிவித்தார்.

## குடாநாட்டிலும்...


மேற்கொள்ளப்பட்டது. இந்தச் சம்பவத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதையடுத்து படையினர் மேற்கொண்ட தாக்குதலில் 3 பொதுமக்கள் படுகாயமடைந்தனர். த.மகாதேவன் (வயது 60), எம் அருண்குமார் (வயது 26), கிருஷ்ணகுமார் ஜீவநிதி (வயது 30) ஆகியோரே காயமடைந்து யாழ். போதன வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

வடமராட்சி இன்பருட்டி காண்டீபன் விளையாட்டரங்கப் பகுதியில் நின்றிருந்த படையினர் மீது நேற்றுக் காலை 11 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் 2 படையினர் படுகாயமடைந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவத்தை அடுத்து படையினர் தேடுதல் நடத்தியதாகவும் 4 பேர் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (12,14)



மட்டக்களப்பில் சம்பவம் இடம்பெற்ற இடத்தில் நீதிபதி



திருமலையில் சம்பவ இடத்தை பார்வையிடும் கண்காணிப்புக்குழுவினர்!

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 20.01.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.